அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

எழுநிலம் EZHUNILAM

மாத இதழ் | மணம் 18 | நவம்பர் 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053



## தீபத் திருவிழா!!

## வெளிநாடு செல்லும் முன் சிந்திக்க மறக்காதீர்!!!

## ஈகரவாசகம்!!

## தமிழர் பகுதியில் நில ஆக்கிரமிப்பு



# ஈரவாசகம்!!

**சந்திரிகா**

தாய் மண்ணில்
உயிலெழுதிப் போனவர்கள்
அவர்கள் பிழிந்த குருதி ஊற்று
காயாமல் இருக்கிறது
எப்படி காயும் அந்த ஈர வாசம்?

விடுதலையின்
பிரவசத்திற்காக
கொடுத்த விலை
உயிர்
தேசமெங்கும் உயிர்ப்போடு
துடிப்பாய் மாவீரம்!

வெட்ட வெட்ட
தளைக்கும்
வாழை போல்
ஈழ தேசத்தில்
விளைந்து கொண்டிருக்கும்
மாவீரத் தியாகம்.!

பூத்திருக்கும் பூக்களிலும்
காய்த்திருக்கும்
கனிகளிலும்
அந்த
பூவரசமரக்காற்றின்
ஓசையிலும்
தீராக் காதலாய்
மலர்ந்திருக்கும்
வீரத்தின் திருமுகங்கள்.!

பாதங்கள் ஒவ்வொன்றும்
பூமித்தாயின் மடியில்
பதியும் போதெல்லாம்
முத்தமிட்டு கரைகிறது
அவர்களின் மூச்சுக் கதகதப்பில்!

ஒரு பேரன்பின் காதலால்
வீழ்ந்து கிடக்கிறான் என்றால்
தமிழ் அன்னை
பரிசுத்த மாவீரம் கலந்திருப்பதால்
என்றும் உயிர்ப்பாய்
துடித்திருப்பாள்
மாவீரர் துணையோடு.!

இந்த பிரபஞ்சத்தில் என்றும்
அழியாது வாழும்
மாவீரத்தியாகங்கள்..!

மாத இதழ் | மணம்: 18
நவம்பர்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| தமிழர் பகுதியில் நில ஆக்கிரமிப்பு... | 06 |
| பௌத்தமயமாக்கலுக்குத்... | 09 |
| தீபத் திருவிழா!! (கவிதை)... | 11 |
| வெளிநாடு செல்லும் முன்.... | 12 |
| தமிழர் வீரத்தை பறைசாற்றும்... | 15 |
| கிண்ணியா குறிஞ்சாக்கேணி.... | 18 |
| போதைப்பொருள் பாவனையைத்... | 20 |
| எங்கே செல்லும் இந்தப் பாதை?... | 22 |
| கூடைக்குள் ஒரு தேசத்தை... | 23 |
| தன்னம்பிக்கை.... | 26 |
| வங்கம் தந்த பாடம் | 27 |
| வலை (நெடுங்கதை) ... | 31 |
| இராஜேந்திர சோழன்... | 36 |




## திருக்குறள்


**குறள் 204:**

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"

**விளக்க உரை:**

பிறனுக்கு கேட்டைத் தரும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் கூட எண்ணக்கூடாது. எண்ணினால், எண்ணியவனுக்கு கேடு விளையுமாறு அறம் எண்ணும்.












‘சங்கே முழங்கு’ கவிதை நன்று. இலங்கையின் அவலங்களை வெளிக்கொணர்வதில் உங்களுக்கு நிகர் நீங்களேதான். வழமைபோல புத்தகம் அருமை. புத்தகத்தின் வடிவமைப்பும் சூப்பர்.

**-பிருந்தா ஜனகன்**
**(பிரித்தானியா)**




காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடியலையும் குடும்பங்கள் படும்பாடு இரத்தக் கண்ணீரை வரவழைக்கிறது. எங்களின் நிலம் அபகரிக்கப்படுவதை அருமையாக வெளிக்கொணர்கிறீர்கள். இதற்கு ஒரு முடிவு கட்டாவிட்டால் ஒரு பிடி மண்கூட எங்களுக்கு மிஞ்சாது.

**-பானு அரவிந்தன்**
**(சிட்னி)**

‘தமிழ் என் உயிருக்கு நேர்’ கவிதை நயமாகவிருந்தது. ‘வங்கம் தந்த பாடம்’ எங்களுக்கும் ஒரு பாடம்தான். ‘வலை’ கதை உண்மையிலேயே பெண்களுக்கு விரிக்கப்படும் வலைதான் என்றாலும் சமூக அவலங்களையும் நாசூக்காக இடையிடை கொண்டுவருவது எழுத்தாளரின் புத்திசாலித்தனம். மிக அருமை.

**-நந்தகோபன்**
**சுப்பிரமணியம்**
**(நியூயோர்க்)**

ஆசிரியர் பக்கம் எப்போதும் போல மிகச் சிறப்பு. நல்ல கட்டுரைகள் வருகின்றன. புத்தகம் தரமாக இருக்கிறது.

பெண்களுக்கான ஆக்கங்களை அதிகரிப்பதும் சிறுவர் பக்கங்களை இணைப்பதும் புத்தகத்தை மேலும் மெருகேற்றும் என்பது எனது அபிப்பிராயம். கருத்தில் எடுப்பீர்களா?

**-கேதா கௌரிசங்கர்.**
**(நெதர்லாந்து)**

முல்லையின் ‘பெண்’ கவிதை அருமை. கவிஞருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. பிறநடுகளின் போராட்ட வரலாறுகள் உத்வேகமூட்டுகின்றன. எனக்கு ‘வலை’ நெடுங்கதை மிகவும் பிடித்திருக்கிறது. அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பைத் தூண்டுவதாக உள்ளது.

**-விமலேஸ்வரி**
**ஐங்கரன்.**
**( பிரான்ஸ்)**

நீங்கள் வெளிப்படுத்துவதை விட இங்கு நடக்கும் அவலங்கள் ஏராளம். எல்லாமே திட்டமிட்டு அரங்கேற்றப் படுகின்றன.

சமூக உணர்வோடு இருப்போரின் எண்ணிக்கை அருகிக்கொண்டு வருகிறது. இப்போதைய இளைய தலைமுறை வழிதவறுவதை பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை.

தயவுசெய்து ஏதாவது செய்யுங்கள். எல்லோரையும் காப்பாற்ற, வெளிநாடுகளில் இருப்பவர்கள் ஒன்றிணைந்து முயன்றால்தான் முடியும். தயவு பண்ணுங்கள்.

**-சாமிநாதன்.**
**(தாயகம்)**

‘பாரி’யின் கட்டுரைகள் எப்போதுமே தாயகப் பிரச்சனைகளை இலகு நடையில் வெளிப்படுத்துகின்றன. மலையக மக்களின் பிரச்சனைகளும் வெளிவருவது நன்று. பலருக்கு இந்த விடயங்கள் தெரிவதேயில்லை. கோயில்களும், நிலங்களும் பறிபோய்க்கொண்டிருக்கும் வேகம் அச்சமூட்டுகிறது. எங்களுடைய பழைய பெருச்சாளி அரசியல்வாதிகள் கதிரையைத் தேய்ப்பதை எப்போது நிறுத்தப் போகிறார்கள்? அடுத்த தலைமுறைக்கு வழிவிட்டுத் தொலைய மாட்டார்களா?

**-சிவசு சுந்தர்**
**(கட்டார்)**

‘குங்குமக் கேள்வி’ நம்ம பெண்கள் படும்பாட்டை அப்படியே புட்டு வைத்திருக்கிறது. நீண்ட நேரத்திற்கு அந்தக் கவலை மனதோடு இருந்தது.

நாட்டார் பாடல் தொகுப்பு சிறப்பு.

தலிபான்களின் அட்டகாசம் நம்ம ஊர் சண்டியர் அரசாங்கம் போலவே உள்ளது.

**-பிரான்சிஸ் யேசுரட்னம்.**
**(மட்டுநகர்)**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
Ezhunilam.com

# நினைவேந்தல் மாதம்

## ஆசிரியர் பக்கம்

கண்ணீரும் கம்பலையுமாக 33வது மாவீரர் நாள் நடந்து முடிந்திருக்கிறது. உலகப் பரப்பெங்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டு, தம் உயிரினும் மேலானவர்களுக்கு விழி நீர் சிந்தி, மலர் சாத்தி வணங்கி வழிபட்டு தங்கள் அஞ்சலியைக் காணிக்கையாக்கி இருக்கிறார்கள். தாயகமெங்கும் மாவீரர்நாள் விழா மிகச் சிறப்பாகவும் எழுச்சியுடனும்தான் நடைபெற்றது. வழமைபோல சிங்கள அரசு விழாவிற்குத் தடை போடாவிட்டாலும், காவற்துறையினூடு ஆங்காங்கே மாவீரர் தின விழாவைக் குழப்பும் முயற்சிகள் நடைபெறாமலும் இல்லை.

குறிப்பாக, 27/11/22 அன்று முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தின் முன்பாகக் கட்டப்பட்டிருந்த முகப்புப் பகுதியை காவற்துறையினர் பிடுங்கி தமது வாகனத்தில் ஏற்றிச் செல்வதும், மக்கள் அவர்களுடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபடுவதும், காணொளியாகப் பரவி மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவான இந்த மாவீரர்நாள்1989ம் ஆண்டு முதன் முதலில் செயல் வடிவம் பெற்று மணலாறு புனிதபூமியில் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அதே சமயத்தில் இந்திய இராணுவத்தின் பிடியிலிருந்தது யாழ்.மாவட்டம். அங்கு தலைமறைவாக இருந்த போராளிகள் ‘உங்கள் சுவடுகளில் தொடரும் எங்கள் பாதங்கள்’ என்ற உணர்ச்சிமிகு வரிகளுடன் கூடிய பாதச்சுவடுகள் வரையப்பட்ட சுவரொட்டிகளை பல இடங்களில் ஒட்டி, இந்நிகழ்வை மக்களுக்குத் தெரியப்படுத்தினர். அன்றுமுதல், எதிர்ப்புகளையும் தாண்டி, மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது இந்த நாள்.

நினைவேந்தல் என்பது மக்களுடைய உரிமை. உயிரிழந்த தன்னுடைய குடும்ப உறுப்பினருக்கு, தன்னுடைய அயலவருக்கு, தன் நண்பர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு யாருடைய அனுமதியும் கோரத் தேவையில்லை. நினைவேந்தல் என்பதையும் கடந்து, இவை இனப்படுகொலைக்கான வரலாற்றுச் சாட்சிகள். எங்கள்மீது திணிக்கப்பட்ட இனவாதத்தினை எதிர்த்து, மற்றவர்களைக் காத்து தன்னுயிரை விட்டவர்களின் ஈகத்தை உலகறியச் சொல்லும் ஒரு நிகழ்வு.

ஐ.நாவின் சர்வதேச பொருளாதார சமுக கலாசார உடன்படிக்கை கூட நினைவேந்தல் என்பது மக்களின் கலாசார உரிமை என்பதனை ஏற்றுக் கொள்கிறது.

இம்முறை சிங்கள அரசு நினைவேந்தலுக்கு பெரியளவில் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை என்பதால் அவர்கள் மனமாற்றம் அடைந்துவிட்டார்கள் என்று பொருளல்ல. இறந்தவர்களின் கல்லறைகளையும் கண்டு அஞ்சி நடுங்கி, அவற்றைச் சிதைத்தழித்தவர்கள் அவர்கள். இன்று அமைதி காப்பதும் காரியத்துடன்தான். இன்று நாட்டின் பொருளாதார வளம் முடங்கிப் போயுள்ளது. புலம்பெயர் தமிழர்களின் பணம் மாவீரர் விழாவிற்கு வந்திறங்கும், வெளிநாடுகள் அரசின் மனமாற்றத்தைப் பார்த்து கடன் வழங்கி உதவுவார்கள், ஐ.நா வின் கெடுபிடிகளும் குறையக்கூடும் என்று பலவேறு கணிப்புகளுடன்தான் அரசு மௌனம் காப்பதாகத் தெரிகிறது. இருந்தும், பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவீரர் நாளில் கலந்துகொண்டிருந்தாலும், உளவாளிகளின் கண்களில் தட்டுப்படக் கூடாது என்ற பயத்திலும் தாம் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை என்றும் மக்களிற் பலர் சொல்லியிருக்கிறார்கள்.

எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் அவற்றையெல்லாம் மீறி மாவீரர்களுக்கு விழா எடுத்த யாழ் பல்கலைக் கழக மாணவர்களின் துணிச்சலைப் பாராட்டியே ஆகவேண்டும். இளைய சமுதாயம் வெகுண்டெழும் போது அநீதிகள் அடங்கித்தான் போகவேண்டும். இனிவரும் சமுதாயம் எமது வரலாற்றைப் பின்தொடர இந்த இளைய சமுதாயம் வழிகாட்டியாகும் என நம்புவோம்.

பாரி




# தமிழர் பகுதியில் நில ஆக்கிரமிப்பு

இனவாதப் போர் தின்ற எங்கள் தேசத்து மக்கள் தமது உயிரானவர்களை, தமது வீடு –வாசல் –உடமைகளைத் தொலைத்து, இன்னமும் திக்கற்ற நிலையில் இருக்கிறார்கள். ஒரு பகுதி மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உலகப் பரப்பெங்கும் சிதறுண்டு கிடக்கிறார்கள். ‘தமிழர்களின் பாரம்பரிய தாயக பூமி’ என்ற பதம் இருக்கும்வரை தமிழர்களை அழிக்க முடியாது என்பதை நினைவிற் கொண்டு, தமிழர் நிலத்தைத் துண்டாடும் திட்டமிட்ட சதிவேலையை சிங்கள இனவாதிகளும் அவர்கள் நடத்தும் அரசும் நிறுத்தவேயில்லை. தமிழர் நிலங்களில், அவர்கள் குடியிருப்புகளுக்கு இடையில் பிற இனத்தவரை அடாவடியாகக் குடியேற்றுவதும், தொல்லியல் ஆய்வுகள் என்ற பெயரில் பூர்வீகத் தமிழனின் தொன்மையை அழித்து அங்கு பௌத்தத்தை நிறுவப்படாத பாடுபடுவதும் அண்மைக் காலங்களில் மிகவும் அதிகரித்துள்ளது.

ஏற்கனவே, கிழக்கின் பெரும்பகுதி இந்த திட்டமிட்ட இனப்பரம்பலின் விளைவாக தமிழ் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்டு விட்டது. இப்போது, வடக்கிலும் ஒரே நேரத்தில் பல முனைகளில் இந்த நகர்வு நடைபெறுவது தமிழ் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. நில அபகரிப்புகளை எதிர்த்து மக்கள் ஆங்காங்கே போர்க்கொடி தூக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் ஓரிடத்தில் ஆர்ப்பரிக்கும்போது, வேறு பல இடங்களில் ஒரே நேரத்தில் நில சுவீகரிப்பு நடைபெறுவதுமக்களுக்கு ஒரு பெரிய பிரச்சனையாகவுள்ளது.






# தமிழர் பகுதியில் நில ஆக்கிரமிப்பு

அரச நீதிமன்றுகளோ அல்லது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற போர்வையில் அரசுடன் இணைந்து இயங்கும் 'ஆட்காட்டி' களோ தமிழர்களுக்கான எந்தத் தீர்வையும் பெற்றுத்தரப் போவதில்லை. இன்னும் சொல்லப்போனால், இத்தகைய புல்லுருவிகள் இனவாதம் கக்கும் அரசு தரும் பதவி எலும்புத் துண்டுக்காக எமது மக்கள், நிலம் அனைத்தையும் தொடர்ச்சியாக காட்டிக் கொடுத்தவண்ணம் உள்ளனர். தனது மக்களையே காணாமலாக்கி ஏப்பம் விட்டு, இன்று கூச்சமேயில்லாமல் பாராளுமன்றில் வாய்ச் சவடால் பேசும் பிள்ளையான், டக்ளஸ் போன்றவர்கள் இதற்கு மிகச்சிறந்த உதாரணங்கள் இல்லையா?

தமிழ் மக்கள் விவசாயத்தையும் கடற்தொழிலையுமே பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். குடியுருப்பு நிலங்களுடன் விளைநிலங்களும் அபகரிக்கப்படும்போது மக்கள் நிலத்தை மட்டுமல்லாது, பயிர்ச் செய்கையையும் இழந்து வாழ்வாதாரம் எதுவுமின்றி அல்லலுறும் நிலைக்கு வந்துள்ளனர். அண்மைக்காலங்களில் சிங்கள அரசு முல்லைத்தீவு மாவட்டத்தை முழுமையாகக் கபளீகரம் செய்யும் நடவடிக்கையில் இறங்கியிருப்பது அங்குள்ள மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.வடமாகாணத்தில் விவசாய நிலங்களைக் குறிவைத்து அரசின் நகர்வுகள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

★கொக்குத்தொடுவாயில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் முந்திரிச் செய்கைக்கென வழங்கப்பட்ட தலா 25 ஏக்கர் நிலங்களும் மொத்தமாக அப்படியே முழுமையாக இராணுவத்தின் வசம் உள்ளது.

இவை பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களாகும்.

★ துணுக்காய் தேற்றாங்கண்டலில் இருக்கும் பண்ணையையும் இராணுவம் கையகப்படுத்தியுள்ளது.

★ முல்லைத்தீவில் 1200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலமுள்ள தேராவிற் பண்ணை இராணுவத்தின் பிடியிலுள்ளது.

★ முல்லை குருந்தனூர் மலையைச் சூழவுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் தனியாருக்குச் சொந்தமான விளைநிலங்கள் தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் கையகப்படுத்தப் பட்டுள்ளன.

★ முத்துஐயன்கட்டுப் பகுதியில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு அத்தனை ஏக்கர் நிலங்களும் இராணுவப் பண்ணைகளாக்கப் பட்டுள்ளன.

இவை தவிர

★ மன்னார் வெள்ளாங்குள 500 ஏக்கர் பண்ணை இராணுவத்தின் பிடியிலுள்ளது.

★ மன்னார் முழங்காவில் 1800 ஏக்கர் பரப்பளவிலுள்ள மரமுந்திரிகைத் தோட்டம் இன்னமும் இராணுவத்தின் பிடியில் தான் உள்ளது.

★வவுனியாவில் தமிழர்க்குச் சொந்தமான தனியார் விவசாய நிலங்களை ஏக்கர் கணக்கில் அபகரித்து இராணுவம் பண்ணை அமைத்துள்ளது.

★ வவுனியா செட்டிகுளப் பகுதியிலும் தமிழர் நிலம் அபகரிக்கப்பட்டு இராணுவத் திற்குரிய பெரும்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

★ முக்குப்பம் 100 ஏக்கர் தென்னந்தோட்டத்தை இராணுத்தினர் விடுவதாக இல்லை.

★ கிளிநொச்சி வட்டக்கச்சியில் 394 ஏக்கர் பண்ணை நிலம் இராணுவ வசம் உள்ளது.

★ கிளிநொச்சி மலையாளபுரம் 800 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள பண்ணையை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது.

★ கிளிநொச்சி ஜெயபுரத்தில் 120 ஏக்கர் நிலத்தினை ஒப்படைக்காது அங்கு தொடர்ந்தும் தங்கியிருக்கின்றனர் இராணுவத்தினர்.

★ கிளிநொச்சி சாந்தபுரத்திலுள்ள சுமார் 700 ஏக்கர் பண்ணையை இராணுவத்தினர் அபகரித்து அனுபவித்து வருகின்றனர்.

இவைதவிர, யாழ்ப்பாணத்தில் 3000 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு இன்னமும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். மன்னாரில் கிட்டத்தட்ட 800 ஏக்கர் நிலப்பரப்பிலும் முல்லைத்தீவில் சுமார் 30,000 ஏக்கர் நிலப்பரப்பிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் தனியார் காணிகள், சுடலைகள், வழிபாட்டிடங்களுக்குச் சொந்தமான காணிகள் என்பனவும் அடங்கும்.முறுகண்டி பிள்ளையார் கோவிலுக்கு எதிர்ப்புறத்தில் ஏ9 பாதையை ஒட்டி சுமார் 1725 ஏக்கர் நிலப்பரப்பும் இராணுவப் பிடிக்குள் உள்ளது. வவுனியாவில்



புளியங்குளம், மருதோடைஉட்பட பல இடங்களில் சிறப்பு அதிரடிப்படை முகாம்களும், இராணுவ முகாம்களும் அமைக்கப்படுவதற்காக பல தனியார் தமது நிலத்தை இழக்க வேண்டியிருந்தது.

இவையெல்லாம் சில உதாரணங்கள் தான். உண்மையைச் சொன்னால், தமிழ் மக்கள் தமது ஒவ்வொரு அங்குல நிலத்தையும் தக்கவைக்க கடுமையாகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கையகப்படுத்தப்பட்டுள்ள அத்தனை விளை நிலங்களிலும் வரும் பல மில்லியன் ரூபா பெறுமதியுள்ள வருமானத்தை இராணுவத்தினரும் அவர்களூடாக அரசும் அனுபவிக்கின்றனர்.

கடும் உடல் உழைப்பாளிகளான தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் நிலங்களை இழந்து, வாழ வழியற்று இந்த சுவீகரிக்கப்பட்ட பண்ணைகளில் அடி மாட்டு வேலை செய்து வயிற்றைக் கழுவும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வேலைக்கெனப் போகும் பெண்கள் இராணுவத்தினராலும் அவர்கள் அடிவருடிகளாலும் பாலியல் இம்சைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இதனால் அங்கு தம்மால் வேலைபார்க்க முடியாமல் குழந்தைகள் அரைகுறைப் பட்டினியால் தவிப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதை அவர்கள் எங்கே போய் முறையிட முடியும்?

இன்னுமொரு பகுதித் தமிழர்கள் உடல் உழைப்பைக் குறைத்து வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தில் வாழ்க்கையை ஓட்டும் நிலையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த வகையிலான பொருளாதாரத்தை நம்பி எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க முடியும்? இந்த மாதிரியான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டவர்களால் இளைய தலைமுறையை சரியாக வழி நடத்த முடியாது என்பதை அதிகரித்துவரும் சமுகச் சீர்கேடுகளும் போதைப்பொருள் பாவனையும் உறுதிப்படுத்துகின்றன.

**“நாங்கள் எங்கள் தாய்ப்பூமியை மட்டுமல்லாது எங்கள் பொருளாதாரத்தையும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். இதில் விட்டுக்கொடுப்பு, சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கடும் நெருக்கடி மிகுந்த போர்ச் சூழலிலும் எங்கள் பொருளாதாரம் மிகச் சிறப்புடன்தான் இருந்தது. அப்போதும் வாலிப வயதினர் இருந்தார்கள்தான். ஆனால், யாரும் சோம்பியிருக்கவில்லை, சமுகச் சீர்கேடுகள் விரல் விட்டு எண்ணுமளவிற்கே இருந்தன. பெற்றவர்கள் பிள்ளைகளைக் கண்டிப்புடனும் அரவணைத்தும் வளர்த்தார்கள் என்பதை நினைவிற் கொண்டு பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அத்தனை வழிவகைகளிலும் இறங்க வேண்டும்.”**

நாங்கள் எங்கள் தாய்ப்பூமியை மட்டுமல்லாது எங்கள் பொருளாதாரத்தையும் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். இதில் விட்டுக்கொடுப்பு, சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கடும் நெடுக்கடி மிகுந்த போர்ச் சூழலிலும் எங்கள் பொருளாதாரம் மிகச் சிறப்புடன்தான் இருந்தது. அப்போதும் வாலிப வயதினர் இருந்தார்கள்தான். ஆனால், யாரும் சோம்பியிருக்கவில்லை, சமுகச் சீர்கேடுகள் விரல் விட்டு எண்ணுமளவிற்கே இருந்தன. பெற்றவர்கள் பிள்ளைகளைக் கண்டிப்புடனும் அரவணைத்தும் வளர்த்தார்கள் என்பதை நினைவிற் கொண்டு பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அத்தனை வழிவகைகளிலும் இறங்க வேண்டும்.

தாயகத்திலுள்ள மக்கள் மட்டும் போராடி எதுவும் ஆகப்போவதில்லை. புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்கள் தாயகத்தில் உள்ள குடும்பங்களைப் பராமரிக்க பெருமளவு பணத்தைச் செலவிடுகின்றனர். 13 வருட காலம் இப்படிச் செலவு செய்தும்,சுயமாகத் தொழில்செய்யும் வழிமுறையை தவிர்த்து இலகு வாழ்க்க்கைக்குத் தம்மைப் பழக்கப்படுத்தி வாழும்சமுகம் ஒன்றும் தோற்றம் பெற்றுள்ளதுதான் வேதனையான விடயம். இனி, பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில், தாயகத்தில் உள்ளவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவது தான் இழந்துவரும் எங்கள் பொருளாதாதாரத்தை மீட்டெடுக்கும் ஒரே வழி. நிலச்சுவீகரிப்பிற்கு எதிரான அனைத்து வழிவகைகளையும் செய்யவும் எமது பொருளாதார நிலையை மேம்படுத்தவும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். விரைந்து செயலில் இறங்க வேண்டும்.



கார்த்திகை




# பௌத்தமயமாக்கலுக்குத் துணை போவதா?

பல்வேறு இன்னல்களுக்கும் ஆளாகி, சிக்கிச் சீரழிந்துவரும் எமது தமிழ்ச் சமுகம் இன்னமும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி விடை தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிறது. முதலைகளுக்கு இரையாக்கப்பட்டார்கள், மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படும், கைது செய்யப்படவே இல்லை என்று எது உண்மை, எது பொய் என்று தெரியாமல் அல்லலுறுகின்றனர் உறவினர்கள். அவர்களுக்கான விடையைத் தேடி நீண்ட போராட்டம் நடத்தும் இந்த உறவுகள் கூட மண்ணிலிருந்து மறைய ஆரம்பித்துவிட்டன. ஆனால், பதில்தான் கிடைத்தபாடில்லை.

புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், எந்த விடிவும் இல்லாமல் கடை நிலையில், நாளாந்த வாழ்க்கைக்காகப் போராடும் நிலையில்தான் பல்லாயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் இன்றுமுள்ளன. இவற்றுடன் இணைந்து, பௌத்த மேலாதிக்கத்தின் நில அபகரிப்பிற்கு எதிராக, தமது ஒவ்வொரு அங்குல நிலத்தையும் போராடிப் பாதுகாக்க வேண்டிய நிலையிலுள்ளனர் எமது மக்கள்.

சில படித்த புத்திஜீவிகள் என்று சொல்லப்படுகின்ற தமிழர்களே பௌத்த இனவாதத்திற்கு ஒத்து ஓதி, அவர்கள் அடிவருடிகளாகவிருந்து தமிழ் மக்களுக்கு துரோகமிழைப்பவர்களாக இருப்பது வேதனையிலும் வேதனை. போர் முடிந்தது என்று பிரகடனம் செய்து இத்தனை ஆண்டுகளாகி விட்டன. இருந்தும் இன்னமும்நல்ல உடையோ உணவோ இல்லாமல் எத்தனை தமிழ்க் குடும்பங்கள்தவித்துக் கிடக்கின்றன?

இப்படிப்பட்டவர்களுக்கு உதவுவதை விடுத்து, யாழில் ஒரு விகாரைக்கு ‘வஸ்திர தானம் வழங்கும் விழா’ எடுத்து தங்களுடைய விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார்கள் தம்மைப் பெரிய மனிதர்களாகக் காட்டிக் கொள்ளும் கேடுகெட்ட சில மனிதர்கள். அதுவும் தமிழர் நிலத்தை அபகரித்து, தமிழ்க் குடியிருப்புகளுக்கு மத்தியில் கட்டப்பட்ட ஆரிய குளத்திற்கு அண்மையில்

> **சில படித்த புத்திஜீவிகள் என்று சொல்லப்படுகின்ற தமிழர்களே பௌத்த இனவாதத்திற்கு ஒத்து ஓதி, அவர்கள் அடிவருடிகளாகவிருந்து தமிழ் மக்களுக்கு துரோகமிழைப்பவர்களாக இருப்பது வேதனையிலும் வேதனை. போர் முடிந்தது என்று பிரகடனம் செய்து இத்தனை ஆண்டுகளாகி விட்டன. இருந்தும் இன்னமும் நல்ல உடையோ உணவோ இல்லாமல் எத்தனை தமிழ்க் குடும்பங்கள் தவித்துக் கிடக்கின்றன?**



# பௌத்தமயமாக்கலுக்குத் துணை போவதா?

அமைந்துள்ள நாக விகாரைக்கு.  யாழ்ப்பாண பொது அமைப்புகள் இணைந்து இவ்விழாவை எடுத்ததாகச் சொல்லப்பட்டாலும், இதன் பின்னால் முன்னாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் என்ற படித்த புல்லுருவிதான் இருப்பது வெளிப்படையான இரகசியம். பிரதான விருந்தினராக இந்தியத் தூதுவரையும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதியையும் அழைத்துக் கௌரவித்து குதூகலித்து மகிழ்ந்திருக்கிறார்கள் இந்த விழாவில். அதுவும் மாவீரர் மாதத்தில் இந்த விழாவைக் கொண்டாடும்போது ஏன் கொஞ்சமேனும் குற்றவுணர்ச்சி அவர்களை உறுத்தவில்லை?

இனவாதிகள் போடும் எலும்புத்துண்டுக்கு ஆசைப்படும் இத்தகைய மனிதர்களுக்கு, இத்தனையாயிரம் மக்களுக்காக தங்களை அர்ப்பணித்த அத்தனை மாவீரர்களும் ஏன் நினைவிற்கு வரவில்லை? எங்கள் மண்ணைவிட்டுப் போகோம் என்ற வைராக்கியத்துடன் அல்லல்களுக்கிடையில் வாழ்ந்து, இனப்படுகொலையானவர்களை எண்ணிப் பாருங்கள்.அத்தனையாயிரம் பெண்கள், குழந்தைகள், இளைஞர், யுவதிகள், மூத்தோர் முதியோர் என்று ஏன் யாருமே ஞாபகத்தில் வரவில்லை? தங்களுடைய குடும்பத்தினர் பத்திரமாக இருக்கிறார்கள் என்பதாலா?

நிலத்தையும், கடலையும் பறித்து, பௌத்த மதப் பரம்பலையும் இனப் பரம்பலையும் மேற்கொண்டு,இனவாதம் தமிழினத்தைக் கருவோடறுப்பது இவர்களுக்குத் தெரியாததல்ல.விளைநிலங்களும், கடலும் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றன. இது தொழில் துறையிலும் பொருளாதாரத்திலும் ஏற்படுத்தும் பாரிய நெருக்கடிகளை இவர்கள் புரிந்துகொள்ள முடியாதவர்களும் அல்லர்.இராணுவ ரீதியிலும் உளவியல் ரீதியாகவும் எமது மக்கள் நசுக்கப்படுவதற்கு இத்தகைய அடியாட்கள் துணைபோவது எமது தமிழினத்திற்கு மனச்சோர்வைத் தருகிறது.

பதவிக்காகவும் பகட்டுக்காகவும் விலைபோய் தமது இனத்தை விற்கத் துணிந்த இத்தகையவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள். இப்படியான கயவர்களின் முகமூடிகள் கிழிக்கப்பட வேண்டும். சமுதாயத்தின் முன்னால் இவர்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் உலவும் இவர்களைப் போன்றவர்கள் அனைவரும் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவர்களே.

**இனவாதிகள் போடும் எலும்புத்துண்டுக்கு ஆசைப்படும் இத்தகைய மனிதர்களுக்கு, இத்தனையாயிரம் மக்களுக்காக தங்களை அர்ப்பணித்த அத்தனை மாவீரர்களும் ஏன் நினைவிற்கு வரவில்லை? எங்கள் மண்ணைவிட்டுப் போகோம் என்ற வைராக்கியத்துடன் அல்லல்களுக்கிடையில் வாழ்ந்து, இனப்படுகொலையானவர்களை எண்ணிப் பாருங்கள்.**



# தீபத் திருவிழா!!

பொழில்

காற்றோடும் மண்ணோடும்
கலந்து, நிறைந்து
நெஞ்சங்களில் விதையாக
வீழ்ந்து விருட்சமான
மா வீரச் செல்லங்களுக்கு
கார்மேகம் பொழிவு கொள்ளும்
கார்த்திகையில்
தீபத் திருவிழா!!

கல்லான மனதும் கனத்துப் போகும்
ஒவ்வொரு
கார்த்திகையும்!!
எத்தனை இடர்கள் வந்தாலும்..
அத்தனை தடைகளையும் தாண்டி,
விளக்குகள் எரியும்!!
மனதுகள் தகிக்கும்!
ஆறாகிப் பாயும் அஞ்சலி விழிநீர்!!

எத்தகைய வீரம்.!!
எத்துணை தற்கொடை..!
ஈகமும் வீரமும்!
தாய்மடி மீதுள்ள தளராத பற்றும்!
அப்பப்பா
தன்னை எண்ணாமல்
பிறர்க்காக வாழும் மனது
யாருக்கு வரும்?
வாலிப வயதுச் செல்வங்கள்
இவர்களுக்கு இருந்ததே.!

விண்வெளியேகினாலும்
பெண் விடுதலை வேண்டிப்
போராடும் இவ்வுலகில்,
பெண்ணாகிப் பெருமை சேர்த்து
பூவுலகில் புதுமை படைத்தது
எம் தேசம்!!

வன்னி நாச்சியார் பற்றி
வாய்வழி கேட்டதுண்டு.
வேலு நாச்சி, ஜான்சி ராணி பற்றி
படித்து அறிந்ததுண்டு.
விதுசாவும் துர்க்காவும்
களத்தில் விளையாடியதை
நேரில் பார்த்து



வியந்தவர்கள் நாங்கள்.

கடலுக்குள் கணவனை,
தமயனை, தனயனை
அனுப்பி வைத்துவிட்டு
உயிர்துடிக்க கரையில்
காத்திருந்த
எம் பெண்கள்.
அங்கயற்கண்ணியாய்.. நளாயினியாய்
புதிய பிறப்பெடுத்து
சாகரம் ஏறி சமர்க்களமாடிய
புனித பூமியின்
புதல்விகள் நாங்கள்!!

அடுத்த தலைமுறை
அலைப்புண்டு போகாமல்,
பூமிப் பரப்பெங்கும்
சிதறுண்டு கிடந்தாலும்
ஆணிவேர் எங்கள் தாய்நிலத்தில்
ஆழமாய் உள்ளதை
தலைமுறைக்கு கடத்தி,
நல்வழிப்படுத்தி
நகர்த்திச் செல்வோம்!!

உறுதி தளரோம்..!
எல்லோருமாக ஒன்றிணைந்து
எங்கள் வித்துகள் மீது
ஒரு சத்தியம் செய்வோம்!!

புனித பிரியா



# வெளிநாடு செல்லும் முன் சிந்திக்க மறக்காதீர்!!!

சுற்றுலா விசாவில் ஓமானில் வீட்டு வேலை செய்யச் சென்ற பெண்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளமை நாம் அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையிலிருந்து வீட்டுப் பணியாளர்களிடம் இருந்து நாளாந்தம் பெறப்படும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக ஓமானின் மஸ்கட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. இதுபோன்ற புகார்களில் பெரும் பாலானவை சுற்றுலா விசாவில் ஓமான் நாட்டிற்கு வேலைக்குச் சென்ற பெண்களிடம் இருந்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா விசாவில் ஓமானுக்குச் சென்ற பலர் கடத்தல்காரர்கள் மற்றும் மோசடி செய்பவர்கள் மூலம், பதிவு செய்யாமல் ஓமான் சென்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. அடக்குமுறை மற்றும் துன்புறுத்தல் காரணமாக தற்போது ஓமானில் சிக்கியுள்ள சுமார் 90 பெண்கள் இலங்கைக்கு வருவதற்கு பணம் இல்லாத காரணத்தினால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செலவில் மஸ்கட்டில் உள்ள இலங்கை தூதரகத்திடம் உதவி கோரியுள்ளதாகவும் தற்போது அவர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த பெண்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் மற்றும் நலன்புரி வசதிகளை இலங்கை தூதரகம் செய்து கொடுத்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.





# வெளிநாடு செல்லும் முன் சிந்திக்க மறக்காதீர்!!!

பணி நிமித்தமாக ஓமனுக்கு வரும்போது உத்தியோகபூர்வ வழிகள் மூலம் மட்டுமே வருவார்கள் என ஓமானில் உள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது. சுற்றுலா விசாவில் ஓமானுக்கு அழைத்து வரப்பட்டு, இந்த நாட்டில் பெண்கள் துன்புறுத்தப்படுவது அதிகரித்து வரும் புகார்கள் குறித்து கவனத்தை ஈர்த்த பின்னர் அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டனர். சுற்றுலா விசாவில் அபுதாபி ஊடாக ஓமானுக்கு அழைத்து வரப்பட்ட 12 இலங்கை பெண்கள் குறித்த தகவல்களை ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இந்தக் குழுவிடம் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதேவேளை, சுற்றுலா விசா மூலம் பெண்களை ஓமன் நாட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்காக விற்பனை செய்யும் மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு ஓமன் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெண்கள் காணாமல் போயுள்ளதாகவும், அவர்கள் சிறைபிடிக்கப்பட்டிருப்பதாகவும் ஊடகங்கள் வெளியிட்ட தகவலின் அடிப்படையில் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாத்திமா ஹமிடியா என்பவர் காணாமல் போன இலங்கைப் பெண். மட்டக்களப்பு வாலாக்காடு பகுதியைச் சேர்ந்த இவர், கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதி சுற்றுலா விசா பெற்று ஓமான் நாட்டிற்குச் சென்றுள்ளார். 22 வயதான அவர் ஒரு குழந்தையின் தாயாவார். வேலை வாய்ப்பு நிறுவனம் மூலம் வெளியூர் சென்ற அவர், சில நாட்களில் காணாமல் போனார். இந்த சூழ்நிலையை எதிர்கொள்ளும் முன், அவள் வீட்டிற்கு ஒரு செய்தி அனுப்பினாள்.

அங்கு அவள், ‘என்னை ஓமானில் இருந்து காப்பாற்றுங்கள், எங்கள் நாட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்’ என்றாள். ‘எங்களிடம் ஒரு ரூபாய் கூட இல்லை, அடி வாங்குகிறோம், சாப்பாடு தருவதில்லை, இதை யாரிடம் சொல்வது என்று தெரியவில்லை. மிகவும் துன்பம்’ என்றாள்.

**சுற்றுலா விசாவில் ஓமானுக்குச் சென்ற பலர் கடத்தல்காரர்கள் மற்றும் மோசடி செய்பவர்கள் மூலம், பதிவு செய்யாமல் ஓமான் சென்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. அடக்குமுறை மற்றும் துன்புறுத்தல் காரணமாக தற்போது ஓமானில் சிக்கியுள்ள சுமார் 90 பெண்கள் இலங்கைக்கு வருவதற்கு பணம் இல்லாத காரணத்தினால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செலவில் மஸ்கட்டில் உள்ள இலங்கை தூதரகத்திடம் உதவி கோரியுள்ளதாகவும் தற்போது அவர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த பெண்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் மற்றும் நலன்புரி வசதிகளை இலங்கை தூதரகம் செய்து கொடுத்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.**

# வெளிநாடு செல்லும் முன் சிந்திக்க மறக்காதீர்!!!

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டக்களப்பு அலுவலகத்தில் இருந்து மேற்கொண்ட விசாரணையில், பாத்திமா ஓமான் தூதரகத்தின் பாதுகாப்பில் இருப்பதாக தமது விசாரணையின் போது தகவல் தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

எனினும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது, தூதரகத்தின் கீழ் உள்ள பாதுகாப்பு இல்லத்தின் அதிகாரி ஒருவரும் யுவதி ஒருவரை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. இது தொடர்பில், நீதிமன்றில் உண்மைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. ஆனால் அந்த நபர் இன்னும் பணியில் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில், ஓமானில் உள்ள இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தனது ஏஜென்சியின் கீழ் உள்ள பாதுகாப்பான வீட்டில் 90 பெண்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு வருவதற்கு தூதரகத்தின் உதவியை எதிர்பார்த்து வருவதாகவும் தற்போது அவர்களிடம் உள்ள பணம் அதற்கு போதாது எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மருந்து கொள்வனவுக்கான பணம், சுற்றுலா விசா காலத்தை மீறி தங்கியமைக்காக செலுத்த வேண்டிய அபராதம், விமான டிக்கெட் கட்டணம், வேலை வாய்ப்பு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் இந்த பெண்களை அழைத்து வர நிதியுதவி செய்த நபர்களுக்கு குழு செலுத்த வேண்டியதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

ஓமானில் வேலை செய்ய. அதற்கான போதுமான பணம் அவர்களிடம் இல்லை என தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. இவ்வருடம் இவ்வாறான 240 பேருக்கு தூதரகம் பாதுகாப்பு வழங்கியுள்ளதாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயிரம் அழகான கனவுகளை நனவாக்கும் நம்பிக்கையுடன் வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்லும் இலங்கைப் பெண்கள். அருகில் இல்லை தொலைவில் பாருங்கள். வாழ்வது மிகவும் கடினம் என்பது உண்மைதான். ஆனால் தெரியாத நாட்டிற்கு சென்று உங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொள்ளாதீர்கள். அரசு மூலம் நம்பகமான வெளிநாட்டு வேலைகளை அணுகவும். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தின் அன்புக்குரியவர்களுக்கும் கண்ணீரில்லா நாளை வாழ இது நிச்சயம் உதவும்.





# ஒரு விடியல் வரும்...!!

என் இரவை நிறைக்கின்றன
உன் கனவுகள்!
என்னை சுற்றிய
மூச்சில் அலைகின்றன
இன்னும்
நிறைவேற்றப்படாத உன்
பெரும் இலட்சியங்கள்!

உரிமை தானே
உயிரிலும்
மேலேன்பாய்?
உரிமைக்காய் இந்த
உயிர் - என்பாய்!

இப்படியொரு
குளிர் கால
இருட்டில்தான்
உனக்கும்
எனக்குமான - அந்த
இரகசிய
ஒப்பந்தத்தை
எழுதி முடித்தாய்...

வானம் அழுதது
காடு அதிர்ந்தது
நீ சிரித்தபடி
நின்றாய்..
நினைவிருக்கிறதா?

'பூமாலை வேண்டாம்,
பா மாலை யுடன்
கல்லறை
வர வேண்டும்..
நீ தொடுக்கும் கவிச்
சரத்தில்-என்
கல்லறை பூத்து, காய்க்க
வேண்டும்' என்றாய்..

உன் கல்லறையில்
மண்டியிட முடியாத
கைகள்
மனதோடு அழுகின்றன.

கால்கள் தேடுகின்றன
உன் தடங்களை-நீயோ
நியாத்திற்கு உரமிட்டு
எங்கோ மறைந்து
போகிறாய்..

நட்சத்திரங்களில்
பாடல்
இசைக்கின்றாய்!
ஆழக் கடலில்
நடனமிடுகின்றாய்!

ஈரக் காற்றுடன்
எனக்கு மட்டும்
கேட்கும் -உன்
பாடலை
யாரிடமும் பகிர்ந்திட
முடியாது.
இதயக் குடுவையில்
அடைத்து கொள்கின்றேன்.

மிதயா கானவி



ஐங்கரன் விக்னேஸ்வரா

# தமிழர் வீரத்தை பறைசாற்றும் நடுகல்

ஈழப் போரில் உயிரிழந்த வீர மைந்தர்களின் வீரத்தியாகத்தினை வெளிப்படுத்தும் நடுகல் மாவீரர் துயிலும் இல்லங்களில் நிறுவப்பட்டிருந்தன. இன்று அவை சிதைக்கப்பட்டாலும் நடுகல் வரலாறு தமிழர்களின் வாழ்வோடு ஒட்டிப் பிணைந்ததாகும்.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் ஈழ மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை ஈழ போராட்ட வரலாறு தொட்டு நிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் மாவீரர்கள். அவர்கள் கண்ட கனவுகளுடன் மீளாத் துயில் கொள்ளும் கல்லறை மேல் பேரொளியாக அவர்களை அடையாளப் படுத்துவதே இந்த நடுகற்கள் ஆகும்.

தமிழில் நடுகற்கள் 2 ஆயிரத்து 500 ஆண்டுகால வரலாற்றினை உடையவை. தமிழர் வீரத்தை பறைசாற்றும் நடுகற்கள் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும்.

**பண்டைய சங்க தமிழ் இலக்கியத்தில் உயிர்த் தியாகமும், வீர வழிபாடும்**

போரில் தன் உயிர் துறந்து தாய் மண்ணுக்காக செய்யும் உயிர்த் தியாகத்திற்கான அடையாளச் சின்னங்களாக விளங்குகின்ற நடுகற்கள் அல்லது இவற்றை ‘வீரக் கற்கள்’ என்றும் கூறுவர்.

## பழந்தமிழ்ப் பண்பாட்டில் நடுகல்:

உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்து வந்



துள்ளது. நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ அல்லது தனிப்பட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கோ உரிய வழக்கம் அல்ல. போரில் பங்கு பெற்று உயிர்த்துறந்த வீரனுக்கு நடுகல் எடுத்து அவன் வீரத்தினை போற்றி



# தமிழர் வீரத்தை பறைசாற்றும் நடுகல்

அவனை இறை நிலைக்கு உயர்த்துவது பழந்தமிழரின் உயர்ந்த வீரப்பண்பாடு. நடுகற்களில் பொறிக்கப்படும் செய்திகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. வீரம் பொறிக்கப்பட்ட நடுகற்களும், உயர்ந்த தமிழ்ப் பண்பை உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ் மக்களின் அறிவு, ஆற்றல், பண்பு, கொடை, வீரசுவர்க்கம் என பல பண்பாட்டுக் கூறுகள் நடுகற்களின் வழி பழந்தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக் கூறுகின்றன. நடுகற்கள் பிற்காலங்களில் கோவில்களாகவும், தூண்களாகவும், வழிபாட்டுச் சின்னங்களாகவும், சுமைதாங்கிக் கற்களாகவும் உருமாற்றம் பெறுகின்றன. நடுகற்கள் வீரன் குலதெய்வமாக மாற்றப்பட்டு நாட்டார் தெய்வநிலைக்கு உயர்கின்றன.

போரில் மடிந்த வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக் கற்களை மக்கள் வணங்கி வந்தமை பற்றியும் பண்டைக்கால இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.



## பண்டைய இலக்கியத்தில் நடுகல் :

தமிழ் இலக்கியங்கள் சொல்லும் பல உயிர்த்தியாகங்கள் நடுகற்களாக நமக்கு காணக்கிடைக்கின்றன. திருக்குறளில், குறள் எண் 400-ல் மாடு என்ற சொல் செல்வம் என்று சுட்டப்படுகிறது. பசு, எருமை, ஆடு ஆகிய மூன்று விலங்குகளைக் குறிக்க தொறு என்ற சொல்லை நம் முன்னோர் கையாண்டுள்ளனர். போரில் உயிரிழந்த வீரர்களுக்கு மட்டும் நடுகல் எழுப்பப்படுவதில்லை. போரில் இறந்தால் அவ்வீரர்களுக்கு நடுகல் நட்டு வணங்கி வழிபட்டனர். சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள நடுகல் பற்றிய செய்திகள் அனைத்தும் போரில் வீரமரணம் அடைந்த ஆடவர்களின் நினைவைப் போற்றி வணங்குவதற்காக நடப்பட்ட கற்களைப் பற்றியதாகவே உள்ளன.

நடுகற்களில் பழங்கால சமூகநிலை, பண்பாடு, மொழி, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், உயிர்த்தியாகம், வழிபாடு போன்ற உட்கூறுகள் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில்தான் நடுகற்கள் பெருமளவில் கிடைக்கின்றன. அதிலும் குறிப்பாக தமிழகத்தில் நடுகற்கள் வரலாற்றுப் பெருமையும் தொன்மையும் உடையன.

## உயிர்த்தியாகமும் வீரவழிபாடும் :

குறிப்பாக போர்கள் நிகழ்ந்தபோது ஏற்படும் உயிரிழப்புகளே நடுகற்கள் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம். ஊரினை அழிக்க வந்தவர்களிடமிருந்து ஊரைக் காப்பாற்றியவர்களுக்கும், பெண்கள் மானம் காத்தவர்களுக்கும், கொடிய விலங்குகளுடன் போரிட்டு உயிர் துறந்தவர்களுக்கும் நடுகற்கள் எழுப்பப்படுகின்றன.

தமிழ் நாட்டில் நடுகல் எடுக்கும் வழக்கம் மிகப் பழங்காலம் முதலே இருந்துள்ளமை, தொல்லியல் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. மேலும் நடுகற்கள் மக்களால் வணங்கப்பட்டு இறை நிலைக்கு உயர்ந்து ஊர்த் தெய்வங்களாக உருமாறுகின்றன எனவும் அறியப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் நடுகற்கள்:

தமிழ் நாட்டில் சேரன் , சோழன், பாண்டியன் காலத்திலும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. முகத்திலும் மார்பிலும் விழுப்புண்களைப்




பெற்று, வீரத்தோடு முன்னின்று,பொருது பட்ட வீரர்க்கு, அவர் தம் பீடும் பெயரும் எழுதிய நடுகற்களை நிறுவி, பூவும் புகையும் காட்டி, சிறப்பு செய்தல் வழக்கம்.இது 'நடுகல் வணக்கம்' எனப்பட்டது.

அக்காலத்து நிறுவப் பெற்று, மண்ணில் புதையுண்ட வீர நடுகற்கள் இக்காலத்து கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களால் வெளிக்கொணரப்பட்டு வருகின்றன.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு நடுகல் நட்டுக்கோயில் அமைத்து வழிபாடு நிகழ்த்த ஏற்பாடு செய்ததனைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. பெண்களுக்கு நடுகல் நடப்பட்ட செய்தி சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. நடுகல் தெய்வமாக வணங்கப்பட்டதனை பண்டைய இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

## சங்ககாலத்தில் வீர நடுகல்:

சங்கப் பாடல்களிலும், பின்னர் எழுதப்பட்ட நூல்களிலும் நடுகற்கள் பற்றிய தகவல்கள் உள்ளன. தமிழ் நாட்டின் செங்கம், தருமபுரி,தேன்கனிக்கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளிலேயே பெருமளவில்






# தமிழர் வீரத்தை பறைசாற்றும் நடுகல்

**போர்கள் நிகழ்ந்தபோது ஏற்படும் உயிரிழப்புகளே நடுகற்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம். ஊரினை அழிக்க வந்தவர்களிடமிருந்து ஊரைக் காப்பாற்றியவர்களுக்கும், பெண்கள் மானம் காத்தவர்களுக்கும், கொடிய விலங்குகளுடன் போரிட்டு உயிர் துறந்தவர்களுக்கும் நடுகற்கள் எழுப்பப்படுகின்றன. தமிழ் நாட்டில் நடுகல் எடுக்கும் வழக்கம் மிகப் பழங்காலம் முதலே இருந்துள்ளமை, தொல்லியல் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. மேலும் நடுகற்கள் மக்களால் வணங்கப்பட்டு இறை நிலைக்கு உயர்ந்து ஊர்த் தெய்வங்களாக உருமாறுகின்றன எனவும் அறியப்பட்டுள்ளது.**

நடுகற்கள் காணப்படுகின்றன. இப் பகுதிகளில் ஆட்சி செய்த அதியமான் போன்ற அரசர்கள் காலத்தில் நடுகற்கள் எழுப்பப்பட்டுஉள்ளது தெரிகின்றது.

தமிழ் மரபில் கிராமப்புறத்தை ஒட்டிய பழந்தெய்வங்கள் நடுகல் ஒட்டியே தோன்றியவை. அத்துடன் பயிர்த் தொழிலுக்கு அடிப்படையாக விளங்குவது நீர். அந்நீரை தேக்கி வைக்க உதவும் ஏரி உடைந்தபோது அதனை பாதுகாப்பதற்காக உயிரை நீத்து சமுதாயக் கடமையை ஆற்றியவருக்கும் நடுகற்கள் உண்டு.

தமிழரின் வீரப்பண்பாடான ஜல்லிக்கட்டு எனும் ஏறு தழுவுதலின் போது உயிர்நீத்த வீரனுக்கும் நடுகற்கள் எழுப்பப்பட்டுள்ளது. இன்றும் ஜல்லிக்கட்டில் உயிரிழந்த வீர மைந்தர்களுக்கும் தமிழரின் வீரத்தியாகத்தினை வெளிப்படுத்தும் நடுகல் அமைக்கப்பட்டு வருகின்றன.

## நடுகல் வழிபடும் முறை :

நடுகற்களுக்கு நாள்தோறும் தீபதூபம் காட்டிப் பூசைசெய்யும் வழக்கமும் இருந்தது. இதனை புறநானூறு, சிலப்பதிகாரம், மலைபடுகடாம் முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. நடுகல்லைச் சுற்றிலும் கல் அடுக்கி அதனைப் பதுக்கை ஆக்குவர். இந்த நடுகற்களுக்கு ‘வல்லாண் பதுக்கைக் கடவுள்’ என்றும் பெயர் உள்ளது.

நடுகல்லோடு சேர்த்து மயில் தோகைகளை கட்டுவர். உடுக்கு அடிப்பர். தோப்பி என்னும் கள் வைத்துப் படைப்பர். உயிரினங்களைப் பலியிடுவர். இந்தப் பதுக்கைக் கோயில்கள் வழிப்பாதைகள் கூடுமிடத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.அத்தோடு நடுகல்லுக்கு விடியற் காலையில் நன்னீராட்டி நெய்விளக்கேற்றிப் படையலைப் படைத்தும் வந்தனர்.

## நடுகல் குறித்த நம்பிக்கைகள் :

நடுகல்லை நாள் தோறும் வணங்கினால் விருந்தினர் எதிர்ப்படுவர் என்றும் போரில் கணவனுக்கும் அரசனுக்கும் வெற்றி கிட்டும் என்றும் பெண்களிடையே நம்பிக்கையும் இருந்தது. நடுகற்களைத் தவறாது வணங்கினால் மழை மிகுதியாகப் பெய்யும். மழை பெய்தலால் கொடைகாலம் வறட்சி நீங்கிக் குளிரும் மரம் செடிகள் தளிர்த்துப் பூக்கும் அதனால் வறட்சிமிக்க இக்கொடிய வழியில் வண்டுகள் மிகுதியும் மொய்க்கும் வளம் பெருகும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருந்தது. இதனை புறநானூற்றுப் பாடலடிகள் தெளிவுற உணர்த்துகின்றன.

மாவீரர்களின் வேட்கையும், வீரமும், விவேகமும் தான் விடுதலைப்போரின் உயிர் மூச்சு. இவர்களது வெற்றிகளின் பின்னால் வேதனைகள், எத்தனையோ வீரமரணங்கள். தமிழ் மண்ணில் கலந்த குருதியின் தியாகமே நாளைய அரசாக உருமாறும். இவர்கள் களம் கண்ட கதையை தலைமுறைகளிற்கூடாக காலம் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும். மாவீரர்களின் வீரத்தை பறைசாற்றும் நடுகற்களை வணங்கி வாழ்வோமாக.



## கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்து:



ஹஸ்பர் ஏ ஹலீம்

# ஆறாத்துயரில் மக்கள்!

**கிண்ணியா குறிஞ்சாக்கேணி இயந்திரப் படகு கவிழ்ந்து எட்டு உயிர்கள் பலியாகின. இவ் விபத்து இடம் பெற்று (23/11/2022) ஒரு வருட பூர்த்தியாகியதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

சாதாரணமான மழை தூறலில் காலை 7.25 மணி இருக்கும். பெரும் சோகச் சம்பவம் இடம் பெற்றது. அதுவே 2021.11.23 அன்று இடம் பெற்ற கிண்ணியா குறிஞ்சாக் கேணி இயந்திரப் படகுச் சம்பவம். தற்போது அச் சம்பவத்துக்கு [2022.11.23] ஒரு வயதாகிறது. திருகோணமலை மாவட்டம் கிண்ணியா நகரசபை பிரதேச சபையை இணைக்கும் பாலமே குறிஞ்சாக்கேணி பாலம். இந்த பாலம் புனரமைப்புக்காக மூடப்பட்டிருந்த நிலையில் இயந்திரப் படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அப்போது படகு மூலமே பாடசாலை மாணவர்கள்,பொது மக்கள் என பலர் பயணித்தார்கள். ஆனாலும் அன்றைய படகு கவிழ்ந்ததில் பாடசாலை மாணவர்கள் உட்பட எட்டு உயிர்கள் பலியாகின.

குறிஞ்சாக்கேணி கரையோரம் இருந்து, கிண்ணியா நகர பகுதியை நோக்கி, ஆற்றை கடக்கும் போது இவ் இயந்திரப் படகு விபத்து இடம் பெற்றது. கிண்ணியா அல் அஷ்கர் வித்தியாலயம் ஆற்றை கடந்தால் தெரியும். அப்பாடசாலையில் கற்கும் மாணவர்களும் இதற்கு இரையாகினர். கரையைப் படகு சேர சுமார் 50 மீற்றர் இருக்கும் போதே படகு கவிழ்ந்துள்ளது. இதனால் அன்றைய நாள் கிண்ணியா மட்டுமல்ல முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியது. 20 க்கும் மேற்பட்டவர்கள் காயமைந்து உள உடல் ரீதியாக பாதிக்கப்பட்டார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு மாணவிகள்,கர்ப்பிணி தாய், மகள்,தாய், மகன் என எட்டு உயிர்கள் பலியாகின . ஆனாலும் பால புனரமைப்பு என்ற போர்வையில் புனரமைப்பு கைவிடப்பட்டு இடிந்து விழும் நிலையில், அதன் வழி ஊடாக மக்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.





# ஆறாத்துயரில் மக்கள்!



தற்போதைய அரசின் வரவு செலவுத் திட்டத்தில், நெடுஞ்சாலை அமைச்சுக்காக 373 மில்லியன் ஒதுக்கப்பட்டதாக பேசப்பட்டாலும் இப் பால புனரமைப்புக்காக நிதி ஒதுக்கப்படவில்லை. இப் பாலம் ஊடாக பலர் நாளாந்தம் பயணிக்கிறார்கள். பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பலர். ஆனாலும் மக்களுடைய கனவு கனவாகவே செல்கிறது. புனரமைப்பு என்ற போர்வையில் கோத்தபாய அரசின் காலத்தில் அரசியல்வாதிகளால் அடிக்கல் நடப்பட்டது. ஆனால், அது வெற்றியளிக்கவில்லை. நல்லாட்சி அரசில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த போதும் அடிக்கல் நடப்பட்டது. அதுவும் கைகூடவில்லை. இவ்வாறாக ஏமாற்றப்பட்ட மக்கள் தற்போது இயந்திரப் படகு மூலமான விபத்துக்கும் முகங்கொடுத்துள்ளனர். தங்களை தாங்களே ஆற்றுப்படுத்திக் கொண்டிருக்கும் மக்களுக்கு எப்போது தீர்வு கிட்டும்?

'வழமையாக நான் தான் பாடசாலைக்கு கூட்டிச் செல்வது. ஆனால், அன்றைய தினம் எனது இரு மகள்களையும் பாடசாலைக்கு செல்வதற்காக படகு வரை கூட்டிச் சென்று விட்டேன். பிறகு, ஐந்து நிமிடங்களும் இல்லை. இந்த சம்பவத்தை கேள்விப்பட்டேன்.பாடசாலைக்கு சென்றேன். உடனடியாக ஆசிரியர் ஒருவர் கிண்ணியா வைத்தியசாலைக்கு செல்லுமாறு கூறினார். அங்கு சென்றால் இளைய மகள் ஜனாசாவாக இருந்தார். பிறகு, மூத்த மகளை தேடிய போது, வாயில் நுரை வெளியேற உயிருக்காக போராடிய நிலையில் அவரும் எம்மை விட்டு இறைவன் தன் பக்கம் அழைத்துக் கொண்டான்' என இவ் இயந்திர படகு கவிழ்ந்ததில் இரு மகள்களை இழந்த என்.சுஜானா வயது (32) தனது கவலையை வெளிப்படுத்தினார்.

இப்படியாக பல உயிர்களை மாய்த்த இந்த படகு விபத்தில் கர்ப்பிணி தாய் மட்டுமல்ல அப்பாவி இளம் பிஞ்சு மாணவர்களும் இரையாகினர். குறித்த பாலம் புனரமைப்புக்காக மூடப்பட்டுள்ளது என போடப்பட்ட போலி பதாகை அகற்றப்பட்டு மக்கள் அவ் வழி ஊடாக பயணிக்கிறார்கள். 'இந்த பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழலாம். இதன் ஊடாக பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது' என வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கிண்ணியா பொலிஸார் இணைந்து விழிப்புணர்வு பதாகை மூலம் காட்சிப்படுத்தியுள்ளனர்.

ஆனாலும் மக்கள் அதன் மூலமாக மீண்டும் பயணிக்கிறார்கள். மீண்டும் ஒரு அபாயகரமான சம்பவம் இடம் பெற்று விடக்கூடாது என்பதே பலரின் எதிர்பார்ப்பாகும். இப் படகு விபத்தின் போது உயிரிழந்தவர்களுக்கான நீதியான நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும். இந்த பாலம் புனரமைக்கப்பட வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பாகும்.

'இந்த குறிஞ்சாக்கேணி பாலம் புனரமைக்கப்படாது காணப்படுவது வேதனையளிக்கிறது. இதன் ஊடாக பாடசாலை மாணவர்கள் என தற்போது பலர் பயணிக்கிறார்கள். மீண்டும் ஒரு விபத்து இடம்பெறா வண்ணம் இந்த பாலத்தை உடனடியாக புனரமைத்து தருமாறு மக்கள் சார்பாக கோரிக்கை விடுக்கின்றேன்' என கிண்ணியா பொது மகன் றமீஸ் உபை தெரிவித்தார். கிண்ணியா மக்கள் பல வருட காலமாக



ஏமாற்றப்பட்டே வருகிறார்கள்.முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி தேர்தலின் போது கிண்ணியாவில் இடம் பெற்ற கூட்டத்தின் போது கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆனாலும் அவர் ஜனாதிபதியாகி பதவிக் காலம் முடியும் வரை ஆட்சி செய்தார். குறிஞ்சாக்கேணி பாலம் புனரமைக்கப்படாது இன்னமும் அப்படியே இருக்கிறது.

இன்னும் இன்னும் மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்காது இப் பாலத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கைக்கு மேல் கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர்.

நன்றி: டொக்ரர் முத்துப்பிள்ளை முருகமூர்த்தி




# போதைப்பொருள் பாவனையைத் தடுக்க

போதைப்பொருள் பழக்கம் பொதுவாக இளைஞர்கள் மத்தியிலேயே காணப்படுவதால், அவர்கள் அதிகமான நேரங்களை கழிக்கும் பாடசாலைகள் மேலதிக வகுப்புக்கள், பல்கலைக்கழகங்கள், மற்றும் கல்வி நிறுவனங்களில் இப்போதைப்பொருளை கட்டுப்படுத்தும், மற்றும் கண்காணிக்கும் ஒரு பொறிமுறையாக இப்பதிவு இடப்படுகிறது.

இவை வெறும் அனுமானங்கள் அல்ல. நடந்த பல சம்பவங்களின் மூலம் தொகுக்கப்பட்டவை. எனவே தாம் சார்ந்த நிறுவனங்களில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் தயவுசெய்து இவற்றைக் கடைப்பிடிக்க முயற்சியுங்கள்.

இது நமது சமூகத்தின் எதிர்காலம் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

1.மாணவர்களின் கண்கள் சிவப்பாக அல்லது அரைவாசி மூடிய நிலையில் இருக்கின்றதா என அவதானியுங்கள்.
2.காரணமின்றி புன்னகைக்கும் தேவையில்லாமல் பேசும், அதிகமாக தூங்கும், மற்றும் நடுக்கம்,அதிக வியர்வை ஏற்படும் மாணவர்களை சந்தேகியுங்கள்.
3.வகுப்பறையின் குப்பைக்கூடையை எதேச்சையாக பரிசோதியுங்கள். அதனுள் பேனா குளிசை கவர்கள், பற்ற வைத்த தாள், சுருட்டிய பேப்பர்கள், கச்சான் தகடுகள், கண்ணாடி குழாய்கள், தலை கழற்றப்பட்ட லைட்டர்போன்றன காணப்பட்டால் உஷாராகுங்கள்.
4.Interval நேரம், பாடசாலையின் எல்லைகளை (கதவுகள், சுவர்கள் மேலால்) அவதானியுங்கள் . அதனூடாக இவ்வியாபாரம் அதிகமாக இடம்பெறுகிறது. இந்நேரம் வெளியாட்கள் யாரும் உள்ளே உலாவுகிறார்களா அல்லது யாராவது சந்தேகத்திற்கிடமாக என அவதானியுங்கள்.

ஏனெனில், interval நேரத்தில் யாரும் அறியாமல் போதைப்பொருட்களைப் பாவிப்பது மாணவர்களுக்கும் இலகுவானது.

Canteen சிற்றூழியர்களும் அடிக்கடி அவதானிப்பது நல்லது, காரணம் இதுவே மிக இலகுவாக விற்கக்கூடிய இடம்.

மிக மிக நேரத்தோடு வரும் மாணவர்களையும்,மிகப்பிந்தி செல்லும் மாணவர்களையும், அவர்களின் செயற்பாடுகளையும் அவதானியுங்கள். அனுமதி இல்லாத, interval நேர ஐஸ், கடலை, இனிப்புப்பண்டம் போன்ற வியாபாரங்களை தடை செய்யுங்கள். டொபி, இனிப்பு வகைகள் போன்றவை புது வகையான brand எனின், அல்லது brand பெயர்கள் இல்லை எனின்,அவதானியுங்கள்.

மாணவர்களின் பெருவிரல், சுட்டுவிரலை அவதானியுங்கள். வித்தியாசமான மணம், நிறம் உள்ளதா என பாருங்கள். பற்கள் ஒரு வகையான பழுப்பு நிறத்தில் (meth mouth ) உள்ளதா எனவும் உதடுகளின் உட்பகுதி சிதைவடைந்துள்ளதா, மேலும் சில வேளை வாயிலிருந்து உமிழ்நீர் வழிகின்றதா எனவும் பாருங்கள்.

பாடசாலை தொடங்கும் நேரமும், விடும் நேரமும் வெளியில் வித்தியாசமானவர்கள் யாரும் நடமாடுகின்றனரா என அவதானியுங்கள்.





மாணவர்களின் புத்தகம்,கொப்பி, கொம்பாஸ், பேர்ஸ் ஆகியவற்றை random ஆக திறந்து பாருங்கள். ஏதும் வெள்ளை நிற பவுடர்கள்உள்ளனவா என்று. இவ்வாறான போதைப்பொருளே இப்போது அதிகமாகப் பாவிக்கப்படுவதும் பாவிக்க இலகுவானதும் ஆகும். சில staff, மற்றும் சிற்றூழியர்கள் மீதும் அவதானமாக இருங்கள்.'இவர் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர், செய்ய மாட்டார்', அல்லது'இவர் பெண் பிள்ளை, இப்படிச் செய்ய மாட்டார்' என அலட்சியமாயிராதீர்கள்.

தேவைக்கு மேலதிகமாக பணம் வைத்திருக்கும் மாணவர்கள் மீது பார்வையை செலுத்துங்கள்.அவர்களின் பெற்றோரை தொடர்பு கொள்ளுங்கள். அடிக்கடி நீர் அருந்தும், தாகம் ஏற்படும் மாணவர்களை அவதானியுங்கள்.

கல்வியில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்ட மாணவர்களை சந்தேகியுங்கள். சொல்லாமல் இருக்க முடியாது, பாடசாலைக்கு அடிக்கடி வந்து போகும் பெற்றோர்களின் மீதும் விழிப்பாயிருங்கள்.

போதைப்பொருளின் தீங்குகளை மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள். பிடிபட்டால் அவர்களின் வாழ்க்கைக்கு ஏற்படும் நிரந்தர பாதிப்புகளைப்பற்றியும் எடுத்துரையுங்கள், மாணவர்களுக்கான ஆன்மீக வழிகாட்டல்களை ஊக்குவியுங்கள். தனிமையிலேயே திரியும் மாணவர்களையும், அடிக்கடி மலசல கூடம் செல்லும் மாணவர்களையும் அவதானியுங்கள்.

சந்தேகத்துக்கிடமான போதைப் பொருட்கள் ஏதும் கண்டெடுக்கப்பட்டால் இது சம்மந்தப்பட்ட அதிகாரிகளை நாடி அது போதைவஸ்து என ஊர்ஜிதப்படுத்தப் பட்ட பின்பே தகவலை வெளியிடுங்கள்.

இவ்வளவு காலமாக மாணவர்கள் சப்பாத்து அணிந்தார்களா, முடி வெட்டினார்களா, நகம் வெட்டினார்களா என பார்த்ததெல்லாம் சற்று ஒதுக்கிவிட்டு இந்த பயங்கர சீரழிவை இல்லாதொழிக்க மேற்கூறியவற்றின் மீது அவதானம் செலுத்துங்கள்.

இதன் அர்த்தம் எல்லோரையும் சந்தேகியுங்கள் என்பதல்ல. நியாயமான சந்தேகம் தவறல்ல. இக்கொடிய தீங்கிலிருந்து சமுகத்தை பாதுகாக்க ஒவ்வொருவரும் முன்வாருங்கள்.

எதிர்காலம் அழகானது. அதை ஆபத்தாக மாற்றக்கூடாது. அனைத்து மக்களும் இணைந்து போதைப்பொருட்களுக்கு அடிமையாகும் எதிர்காலத்தை தடுப்போம்.




**போதைப்பொருளின் தீங்குகளை மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள். பிடிபட்டால் அவர்களின் வாழ்க்கைக்கு ஏற்படும் நிரந்தர பாதிப்புகளைப்பற்றியும் எடுத்துரையுங்கள், மாணவர்களுக்கான ஆன்மீக வழிகாட்டல்களை ஊக்குவியுங்கள். தனிமையிலேயே திரியும் மாணவர்களையும், அடிக்கடி மலசல கூடம் செல்லும் மாணவர்களையும் அவதானியுங்கள்.சந்தேகத்துக்கிடமான போதைப் பொருட்கள் ஏதும் கண்டெடுக்கப்பட்டால் இது சம்மந்தப்பட்ட அதிகாரிகளை நாடி அது போதைவஸ்து என ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பின்பே தகவலை வெளியிடுங்கள்.**

# எங்கே செல்லும் இந்தப் பாதை?

வானுயர்ந்த சோலையில்
வட்ட நிலா காய
கானக மரங்கள்
கவி இசை தென்றல் பாட.

இது அனைத்தும்
பழைய பஞ்சாங்கம்.
புரட்டி வேண்டுமானால்
பார்க்கலாம் புத்தகத்தில்.

நிகழ்காலத்தை
எண்ணிப் பார்க்கின்றேன்.
மரங்களை மட்டுமா
வெட்டினோம்?
மலைகளையும் அல்லவா
காடுகளை இழந்தோம்..- சுத்தக்
காற்றைத் தொலைத்தோம்நாம்.



இப்போது
வனவிலங்குகளை
சரணாலயத்தில் ஆவது
பார்த்ததுக் கொண்டிருக்கிறோம்.
எதிர்காலம் நம்மை
அருங்காட்சியகத்திற்கு
கொண்டு செல்லும்.

காக்கை குருவிகளை கூட
ஏட்டில் காட்டும் நிலை..
வெகுதொலைவிலில்லை.
எங்கே செல்லும்
இந்தப் பாதை..?
மனிதா!!
எங்கே செல்லும் இந்த பாதை?
புவி உன் கையில்
புதைத்து விடாதே
மண்ணுக்குள்!!

முல்லை பாஸ்கர்



# கூடைக்குள் ஒரு தேசத்தை சுமந்த









ஐங்கரன் விக்னேஸ்வரா

# மலையக மக்கள் நாடற்றவரான நாள்!!

**( 1948 நவம்பர் 15இல் மலைகளில்உரமாகி,தேயிலையில் இரத்தமாகி, கூடைக்குள் ஒரு தேசத்தை சுமந்த மலையகமக்கள் நாடற்றவரான நாளாகும். மலையகத்தை எழில் கொஞ்சும் பூமியாகமாற்றிய வலிசுமந்த மக்களின் வரலாற்றுப்பார்வையாக இக்கட்டுரை)**

அந்நியரின் சுரண்டலுக்காய் தமது இரத்தத்தையே உரமாக்கி, இலங் கையின் பொருளாதாரத்தை வளப் படுத்திய 10 லட்சம் மலையக மக்களது குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவரென பிரகடனப் படுத்தப்பட்ட நாள் 1948 நவம்பர் 15.

## கூடைக்குள் தேசத்தை சுமந்த மக்கள்:

மலைகளில் உரமாகி, தேயிலையில் இரத்தமாகி, கூடைக்குள் ஒரு தேசத்தை சுமந்த மலையக மக்கள் நாடற்றவரான நாளே 1948 நவம்பர் 15.

அன்று மொத்தச் சனத்தொகையில் 11.7வீதமாக இருந்த இலங்கை சனத்தொகை அளவில் இரண்டாம் நிலையில் இருந்த மலையக தமிழர்கள் இன்று எண்ணிக்கையில் நான்காம் நிலைக்குத் தள்ளப்பட்டதற்கும், இன்றைய நாள் வரை மூன்றாம் தர பிரஜைகளாக நடாத்தப்





# மலையக மக்கள் நாடற்றவரான நாள்!!

படுவதற்கும் இந்த சட்டமே காரணம் என்பது மறுக்கப் படமுடியாதது.

இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரமடைந்து வெறும் 285 நாட்களுக்குள் யாரெல்லாம் இலங்கை நாட்டவர்கள் என்பதை தீர்மானிப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் யாரெல்லாம் இலங்கை பிரஜை கள் அல்ல என்பதை தீர்மானிப்பதற்கான சட்டமாக மாறி இந்த நாட்டின் இரண்டாவது அதிகளவான சனத்தொகையைக் கொண்டிருந்த சமூகத்தை இலங்கையில் நாடற்றவர்களாக்கிய கரும்புள்ளி வரலாற்றுடனேயே இலங்கை பாராளுமன்றம் தனது வரலாற்றைத் தொடங்குகின்றது. உலக வரலாற்றிலே விந்தையான, வேதனையளிக்கும் நிகழ்வான நவம்பர் 15, 1948 மனித உரிமைக்கு மறுப்புத் தெரிவித்த நாளாகும்.

## கடல் கடந்து கவலை தீர வந்த மக்கள்:

1820 – 1840 காலப்பகுதியில் இந்தியாவின் தென்மாநிலத்தில் அங்குவாழ்ந்த அப்பாவி மக்களை கூலித்தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்துவந்தனர்.

1815ஆம் ஆண்டு கண்டி இராஜ்ஜியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் மலையகமெங்கும் வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் குறைந்த கூலிக்காய் கொண்டு வரப்பட்ட பிரிட்டிஷாரின் கைங்கரியத்தை உணராத இம்மக்கள் தமது மனித வளத்தை தியாகம் செய்து மலைகளைச் செய்து தேயிலைப் படர்ந்த சோலையாக்கினர்.

1823ல் அறிமுகப் படுத்தப்பட்ட காப்பி பயிரிட லுக்கு காரண கர்த்தாக்களாகி அந்நியனுக்குப் பெருலாப மீட்டிக் கொடுத்தனர். பிரிட்டிஷாரது ஆட்சியில் தென்னிந்தியாவிலிருந்து வறுமையைப் போக்க குடிபெயர்ந்த இம் மக்களின் வரலாறு வேதனை நிறைந்தது.

கடல் கடந்தால் கவலை தீரும் என்ற நம்பிக்கையுடன் இலங்கைத் தீவில் காலடி வைத்தவர்களுக்குக் காத்திருந்தது காடுகளும் கரடு முரடு நிறைந்த மலைகளுமே !

## வலிசுமந்த பயணம் !

இந்தியாவில் இருந்து வரும்வழியிலும், வந்துகுடியேறிய பின்னரும் இம்மக்கள் அதிகமான இன்னல்களை எதிர்கொண்டனர். ஆதிலெட்சுமி என்ற கப்பல் கடலில் மூழ்கியதால் 120 பேர் செத்து மடிந்தனர் என்ற வரலாறும் இருக்கின்றது.

இவ்வாறு வலிசுமந்த பயணம் மேற்கொண்டவர்கள் மலைப்பாங்கான பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டதால் – மலையகத் தமிழர் என்றும், இந்திய வம்சாவளித் தமிழர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டனர். 1880ல் காப்பியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பெரும் லாபம் ஈட்டும் தேயிலைப் பயிரிடல் பிரிட்டிஷரால் ஆரம்பிக்கப் பட்டபோது மலையகத் தொழிலாளர்களது உழைப்பே தேயிலைச் செடிகளுக்கு உரமானது.

ஆனால் இவற்றின் மத்தியிலே இவர்கள் பட்ட துன்பங்கள் என்றுமே முடிவுக்கு வரவில்லை. இந்தியாவிலே நிலச்சுவான்தாரர்களாலும், நாட்டாண்மையாலும் சுரண்டப்பட்டு, அடக்கப்பட்ட இம்மக்களை இலங்கையிலும் வெள்ளையனாலும், கங்காணிகளாலும் சொல் லாணா துனபத்துக்கு முகங்கொடுத்தனர்.

## எழில்கொஞ்சும் பூமியாக !

காடுமேடாகவும், கல்லுமுள்ளாகவும் காட்சியளித்த மலைநாட்டை – தமது கடின உழைப்பால் எழில்கொஞ்சும் பூமியாக மாற்றியதுடன், இலங்கையின் பொருளாதாரத்தையும் தோளில் சுமந்தனர்.ஆனாலும், அவர்கள் வசிப்பதற்கு அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையில் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட லயன் அறைகளிலேயே பல தசாப்தங்களை கடந்தனர்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டிலும் இந்நிலைமை முழுமையாக இன்னமும் மாறவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

1931ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் மூலம் வாக்குரிமை பெற்ற போதும் அது 1947 – 1948 களில் கொண்டுவரப்பட்ட இந்திய – பாகிஸ்தானிய ஒப்பந்தம், சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம், பிரஜாவுரிமைச் சட்டங்களினால் பறிக்கப்பட்டது. இதன்பின்னர் 3 தசாதப்தங்களுக்கு மேலாக நாடற்றவர்களாகவே மலையக மக்கள் வாழ்ந்தனர்.

வாழ்க்கையின் இருப்புக்காய், தமது உழைப்பை வெறுமனே விற்ற இவர்களது வாழ்வு, இலங்கையின் சுதந் திரத்திற்குப் பின், கூட இருந் தவரால் குழிபறிக்கப் பட்டது என்பதே வரலாற்று உண்மையாகும்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிவிட்டு வெள்ளையர்கள் வெளியேறிய பின்னர், சிங்களத்தேசியவாதிகள், மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

1947ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் பாராளு மன்றத் தேர்தலிலே ஏழு மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளை மலையக மக்கள் தெரிவு செய்தனர். இடதுசாரிகளின் வெற்றிக்கு காரணமானவர்கள்.

இக் கட்டத்தில் பௌத்த வெறியைத் தூண்டி தேர்தலில் பங்கு கொண்டடி. எஸ். சேனநாயக்கா தலைமையயிலான ஐக்கிய தேசியக் கட்சி மொத்த இடங்கள் 95ல், 42ஐ மட்டுமே பெற்றதோடு மொத்த வாக்குகளில் 39.5 சதவீதம் மாத்திரமே பெற முடிந்தது.



இவர்களது நெருக்குதல்களினால் 1948 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதி இலங்கைக் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

இந்நேரத்தில் தான் தமது பதவி நாற்காலிகளுக்கு ஆபத்தென உணர்ந்த சிங்கள பெருந் தேசியவாதிகள் தமது கபட நாடகத்தைக் கையாண்டனர். இலங்கைப் பொருளாதாரத்தில் 80 சதவிகிதம் சம்பாதித்துக் கொடுப்பவர்களாகவும் கடினமான உழைப்புச் சக்தியை மிகக் குறைந்த விலையில் விற்பவர்களாகவும் உயர்ந்து நின்ற இவர்களை ஸ்தாபன மயப்பட்ட தொழிலாளர்களாகப் பொது அரசியல் வாழ்வில்



# மலையக மக்கள் நாடற்றவரான நாள்!!

பங்கெடுக்க அனுமதிப்பது தமது எதிர்கால நலன்களுக்கு சாவுமணி அடிக்கும் என்பதனை உணர்ந்து சிங்கள அரசு, உலகின் வேறெந்த நாட்டிலும் காணப்படாத இக் கொடியச் சட்டத்தை அமுல்படுத்தியது.

## பிரஜா உரிமை இழந்த மக்கள்:

இதனால் லட்சக்கணக்கான மலையக தமிழ் மக்கள் பிரஜா உரிமை இழந்து தேசிய உரிமை மறுக்கப்பட்டனர்.

பதவியில் அமர்ந்த சிங்கள அரசுகள் தொடர்ந்து மாறி மாறி பல்வேறு ஒடுக்கு முறைகளில் இம்மக்களை வதைப்படுத்தியதை வரலாறு காட்டும். கட்டாயக் குடியேற்றங்களாலும், கொடூர இனக்கலவரங்களாலும் தமது பாரம்பரிய மண்ணில் இவர்கள் அகதிகளாயினர். அனாதைகளாக விரட்டப்பட்டனர்.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தினால் இந்தியாவுக்கு குடிபெயர்ந்தவர்களாக இடம் பெயர்ந்த இம்மக்களுக்கு இந்தியாவிலும் 'சிலோன்' காரன் என்ற பட்டம் கிடைத்ததே தவிர வேறெந்த நன்மையும் ஏற்படவில்லை.

ஆயினும் ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் லட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் தமது பாரம்பரிய மண்ணாக தாம் காலங்காலமாக வளப் படுத்தி வாழ்ந்த அந்த மண்ணையே நேசிக்கின்றனர். ஆட்சியாளர்களின் ஒடுக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டு சிங்கள அராஜக ஆட்சி நடந்தவேலையில் கூட மண்ணை மீட்க போராடியது வரலாற்றின் வெற்றிப் போக்கே எனலாம்.




## பெரும் போராட்டங்களை நடாத்திய மக்கள்:

மலையக மக்கள் குடியுரிமை, வாக்குரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு பெரும் போராட்டங்கள் நடாத்தினர்.

1952ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், 7 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய மூன்று மாத சத்தியாக்கிரக போராட்டம் அன்றிருந்த அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தது.

1958ஆம் குடியுரிமை சட்டத்தின் பிரகாரம் , பிரஜாவுரிமை பெற்றவர்களைத் தவிர ஏனைய நாடற்றவர்களாக கருதப்பட்ட மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கும் விசேட சட்டம் 1988 நவம்பர் 9ம் தேதி நிறைவேற்றப்பட்ட சட்ட மூலமாகவே வழங்கப்பட்டது.

இதனால் நாற்பது வருடங்களாக அரசியல் இழுபறிகளால் தீர்வு காணாத பெரும் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்தது. மலையக சமுதாயத்தினர் 'நாடற்றவர்' என்ற பதத்தில் இருந்து விடுபட்டனர்.

## முன்னேறும் மலையக மக்கள்:

கல்வியிலும் மலையக மக்கள் முன்னேறி வருகின்றனர். அண்மைய ஆண்டு புள்ளிவிபரங்களின்படி பல்கலைக்கழக பிரவேசமும் வரவேற்கும் வகையில் அமைந்துள்ளன.

பெரும் போராட்டத்திற்கு மத்தியில் மாறிவரும் மலையக சமூகம் இன்று அனைத்துத் துறைகளிலும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. சட்டத்தரணிகள் முதல் தலைநகரில் பெரும் வர்த்தகர்கள் வரை மலையகத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து இணைந்து வருகின்றனர்.

அத்துடன் மலையகத்தில் மருத்துவமனைகளை அமைக்க இந்திய அரசாங்கம் நிதியுதவிகளைச் செய்துள்ளதுடன், மலையக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உதவிகயையும் வழங்கிவருகின்றது.

இந்திய அரசும் மலையக மக்களின் நிலையைக் கருத்திக் கொண்டு, வீட்டுத்திட்டமொன்றின் ஊடாக நேசக்கரம் நீட்டி உதவி வருகிறது.

மலையக மக்களின் சுகாதாரத்துறை, கல்வித்துறை என்பவற்றை மேம்படுத்துவதிலும் அந்நாட்டு அரசு அக்கறைக் கொண்டு உதவி வருவதையும் நாம் காணலாம்.

## விழித்து எழுந்த மலையகம் :

1940ஆம் ஆண்டு பிரிட்டிஷாரின் ஆட்சியை எதிர்த்து உயிர் துறந்த கோவிந்தன் போன்றோரும், 1976ல் தாம் வாழும் மண்ணை பறித்தெடுக்க யாருக்கும் உரிமையில்லை என்ற கோஷத்துடன் போராடி மரணித்த சிவனு-லட்சுமணன் போன்ற ஆயிரக் கணக்கானோர் வாழ்ந்து போராடிய மலையகம் விழித்து எழுந்ததால் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. ■



# தன்னம்பிக்கை

சில நாய்களுக்கும் ஒரு சிறுத்தைக் கும் இடையில் எந்த விலங்கு வேகமாக ஓடுகிறது என்றுஒரு போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது..

வானை நோக்கி துப்பாக்கி சுடப்பட்டு போட்டி ஆரம்பமானது.

நாய்கள் ஓட ஆரம்பித்தன...

ஆனால் சிறுத்தை தன் கூண்டை விட்டுவெளியே வரவேயில்லை...

போட்டியைப் பார்க்கக் கூடியிருந்த அனைத்து மக்களுக்கும் தாங்கமுடியாத

ஆச்சரியம்...

என்ன நடந்தது...

சிறுத்தை ஏன் ஓடவில்லை...?என போட்டி அமைப்பாளரிடம் கேட்டார் கள்...

அதற்கு அவர் சொன்ன விடை என்ன தெரியுமா...?

சில சமயங்களில் நீங்கள் சிறந்தவர் என்பதை மற்றவர்களுக்கு நிரூபிப்பது ஒரு அவமானம்...

சிறுத்தை அதன் வேகத்தைவேட் டையாடுவதற்காக மட்டுமேபயன்ப டுத்தும்... அதன்வேகத்தையும், வலி மையையும்சில நாய்களுக்கு நிரூபிக்க வேண்டியஅவசியமில்லை... அப்படி செய்வது நமக்குத்தான்

கால, நேர, ஆற்றல், பொருள் விர யம்...

‘தேவை இல்லாதவர்களிடமும், தகுதி இல்லாதவர்களிடமும்

நாம் யார் என்பதை நிரூபிக்காமல் இருப்பதே சிறந்த புத்திசாலித்தனம்’



அங்கம்: 07

# வங்கம் தந்த பாடம்

**1976** ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10ம் திகதி நான் இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தை இப்பொழுது வாசிக்க விரும்புகின்றேன்.

[ அனுமதி மறுக்கப்படுகிறது. ] வாக்குவாதம் நடைபெறுகிறது.

நீதிபதிகளே!!

ஜனாதிபதிக்கு நான் எழுதிய கடிதம் ஒரு மனிதன் தனது நாட்டை வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்ற விரும்பும் அவா ஆகும். நான் ஒரு சுதந்திர மனிதன். எனது நடவடிக்கைகளாலேயே நான் இச் சுதந்திரத்தைப் பெற்றேன். சிறையின் உயர்ந்த சுவர்களாலேயோ, தனிச் சிறையில் அடைக்கப்படுவதாலேயோ அல்லது கைவிலங்குகள் பூட்டுவதாலேயோ இந்தச் சுதந்திரத்தைப் பறிக்க முடியாது.

22ம் திகதி வைகாசி மாதம் நான் ராஜ்சாகியிலிருந்து இந்தச் சிறைக்குக் கொண்டு வரப்பட்டேன். இங்கு தனிச் சிறைவாசத்தில் விடப்பட்டேன். சிறை முழுவதும் பூரண அமைதியால் சூழப்பட்டுள்ளது. இங்கு வந்தவுடனே, நான் இராணுவ நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படப் போகின்றேன் எனவும், இதற்கெனவே விசேட சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அறிந்துகொண்டேன். ஆனி மாதம் 15ம் திகதி இந்த நீதிமன்றத்தின் தலைவர் சிறையினுள் வைத்து என்னைச் சந்தித்தார். நான் இந்த நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்க மறுத்தேன். ஏனென்றால், சிறையினுள் நீதிமன்றம் எனப்படுவது அரச நீதியின் பெயரால் குற்றமிழைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு ஆயுதமாகும். 21ம் திகதி ஆனி மாதத்தில் நான்கு வழக்கறிஞர்கள் சிறைக்கு வந்து என்னைச் சந்தித்தனர். நீதி கடைப்பிடிக்கப்படும் என்றும், நீதிமன்றத்தில் அரசு தலையிடாது என்றும் வாக்குறுதியளித்தனர். இதன் பின்னர்தான் நான் இந்த நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்க இணங்கினேன்.

இக்கட்டத்தில், இந்த நீதிமன்றத்தை உருவாக்கிய சட்டமே தவறானது என்று நான் கூறுகின்றேன். இச் சட்டம் 1976ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இந்த நீதிமன்றம் அந்தச் சட்டம் உருவாகுவதற்கு முன்பே உருவாக்கப்பட்டது. அவ்வாறு இல்லையெனில், இந்த நீதிமன்றத்தின் தலைவர் ஆனி மாதம் 15ம் திகதியே சிறையில் என்னை வந்து சந்திக்க எவ்வாறு முடிந்தது? மேலும், இந்தச் சிறையினுள் இப்படியொரு நீதிமன்றத்தை அமைக்கும் பணி ஆனி மாதம் 12ம் திகதியே ஆரம்பமாகி விட்டது.

இப்பொழுது நான் இங்கே நிற்கிறேன். எனது வழக்கறிஞருடன் கலந்தாலோசிக்கக்கூட எனக்கு அனுமதி மறுக்

கப்பட்டது. எனக்கெதிரான குற்றச்சாட்டுப் பத்திரத்தை நான் பார்வையிடுவதற்குக்கூட எனக்கு எந்த சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை. எனது குடும்பத்தினர் ஒருவரும் என்னைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இந்த வழக்கு நடத்தப்பட்ட மாதிரியைப்பற்றி மிகக் குறைவாகக் கூறுவதே நல்லது. முழு நடவடிக்கையும் பயத்துடனும் அவசரத்துடனும் செய்யப்பட்டதைப் பார்த்தால் எவரும் அதிர்ச்சியடைவார்கள்.

வேறு சில சிவிலியன்களுடன் இணைந்து, 1974ம் ஆண்டு ஆடி மாதம் முதல் சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக நான் குற்றம் சாட்டப்பட்டுள்ளேன். அத்துடன், ஆயுதப் படைகளுக்கிடையில் பிரிவினையையும், ஒழுங்கின்மையையும் ஏற்படுத்தச் சதி செய்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளேன். இதனால் கார்த்திகை மாதம் 7ம் திகதி அரசைக் கவிழ்த்ததான குற்றச்சாட்டும் என்மீது போடப்பட்டுள்ளது. மேலும், எனக்கு தேசப்பற்று இல்லையென்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தலைவரே!! அங்கத்தவர்களே.!!

குற்றச்சாட்டுக்களின் பெறுமானத்தைப் பற்றிப் பேச நான் தயாராக இல்லை. இவைகள் யாவும் பொய்யும் புனையப்பட்டவையுமாகும். எனவேதான் இவற்றைப் பற்றிப் பேச நான் தயாரில்லை. அவாமி லீக் அரசு கவிழ்க்கப்படுவதற்கு முன்பு நாட்டில் இருந்த நிலைமை பற்றி அந்த அரசின் கீழ் கஷ்டப்பட்டவர்களுக்குத் தெரியும். பெரும் அடக்குமுறை, பொருளாதார ஒழுங்கீனம், சட்டத்தின் வீழ்ச்சி, ஜனநாயக உரிமைகளின் மறுப்பு முதலியனவே நாட்டின் தினசரி சம்பவங்களாக இருந்தன. இப்படிப்பட்ட பாதகமான அரசியல் சூழ்நிலையில் ஒ.கு.ஈ யும், ஏனைய வெகுஜன இயக்கங்களும் பாசிச எதிர்ப்பு ஜனநாயக இயக்கத்தைக் கட்டி வளர்க்க முயன்றன.

தேசபக்தர்களான வீரர்களும் இளவரசர்களும் இக்கட்டத்தில் எங்கே போனார்கள்? எங்கே சியாவூர் ரகுமான்? எம். கே. கானும் எம். ஜி. தலாப்பும் எங்கே? அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? சட்ட ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட அரசை நான் கவிழ்க்க முயன்றதாகக் கூறப்பட்டுள்ளது. யார் முஜீப்பையும் அவரது குடும்பத்தினரையும் கொன்று அவரது அரசைக் கவிழ்த்தார்கள்? யார் முஜிப்பின் கொலையால் பதவிக்கு வந்தார்கள்? யார் முஜிப் வீழ்ச்சியடைந்த பிறகு இராணுவத் தளபதியாகினர்? குற்றஞ் சாட்டப்பட்ட நாங்களா இதனைச் சாதித்தோம்? அல்லது, எங்கள் முன்னால் இருந்து இன்று ஆட்சியிலிருப்பவர்களின் கட்டளையைக் கடைப்பிடிக்கும் நீங்களா முஜிப்பின் மரணத்தால் பெரும் பலன் அடைந்தீர்கள்?

நான் இராணுவத்தில் குழப்பத்தையும் ஒழுங்கின்மையையும் ஏற்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளேன். ஆனால், ஆவணி 15ம் திகதியும், கார்த்திகை 3ம் திகதியும் இராணுவத்தில் என்ன நடந்தது? உயர் அதிகாரிகளுக்கு கட்டளைகள் வழங்கிய மேஜர்கள் யார்? கார்த்திகை 3ம் திகதி சதிக்குப் பிறகு யார் இராணுவத்தில் அதிகார ஒழுங்கைக் குலைத்தது? தனது உயிரைக் காப்பாற்றுமாறு சியா யாரிடம் வேண்டுகோள் விடுத்தார்? நிச்சயமாக எனது தலைமையிலேயே சியா புரட்சி மூலம் மீட்கப்பட்டார். எமது பிரதான நோக்கம் எமது தேசிய சுதந்திரத்தைக் காப்பாற்றி வலுப்பெறச் செய்வதேயாகும். இதனைச் சாதிப்பதற்கு நாம் போர்வீரர்களை இயக்கி அரசியல் உணர்வு பெறச் செய்ய வேண்டியிருந்தது. நான் இதனை வெற்றிகரமாகச் சாதித்து, நாட்டையும் ஆயுதப் படைகளையும் பெரும் அழிவிலிருந்து காப்பாற்றினேன் எனப் பெருமையுடன் கூறுகிறேன்.



சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட அரசை நான் கவிழ்த்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளேன். இது ஒரு பெரும் உண்மை! யார் கார்த்திகை 7ம் திகதிக்கு முன்னர் பதவிக்கு வந்தார்? யாரை காலித் முஸ்ராப் பிரதிநிதித்துவப்படுத்தினார்? யார் சியாவைக் கைது செய்தார்? பயந்துபோன மக்கள் யாருடைய வீழ்ச்சிக்காக மன்றாடினார்கள்? எமது தேசிய சுதந்திரத்தைக் காப்பாற்றவும், நாட்டுக்குப் புதியபாதையைக் காட்டவும் நாம் மக்களுடனும், புரட்சிகரப் போர் வீரர்களுடனும் சேர்ந்து தேசத்துரோகி காலித் முஸ்ரப்பை வீழ்த்தினோம்.

நான் தேசப்பற்று அற்றவனெனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளேன். தனது ரத்தத்தை, ஏன்? தனது உடலின் ஒருபகுதியை நாட்டின் விடுதலைக்காகக் கொடுத்த ஒருவனிடமிருந்து நீங்கள் வேறு எதைக் கேட்க முடியும்? எமது எல்லைகளைச் சுயமாக வைத்திருக்க, நாட்டின் சுயமரியாதையைக் காப்பாற்ற, ஆயுதப் படைகளின் மரியாதையைக் காப்பாற்ற ஒரு அங்கவீனன் தனது உயிரைப் பணயம் வைத்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புரட்சியை நடாத்தினான். இதைத் தவிர வேறு எந்த வழியில் என்னிடமிருந்து தேசப்பற்றை எதிர்பார்க்க முடியும்?

இக் காரணங்களுக்காகவே நான் மேஜர் ஜெனரல் சியாவூர் ரகுமான், அட்மிரல் எம். எச். கான், தவாப், ஒஸ்மானி ஆகியோரையும் அழைக்குமாறு நீதிமன்றைக் கோரினேன். அவர்கள் எல்லோரும் இங்கு சமுகமளித்திருந்தால், இந்த நீதிமன்றுக்கு அவர்களையும் அழைக்கும் அதிகாரம் இருந்திருந்தால், அவர்கள் இப்படிப்பட்ட பொய்களையும் போலியான குற்றச்சாட்டுகளையும் எதிர்க்கத் துணிவற்றிருப்பார்கள். ஆனால், இந்த நீதிமன்றம் தனது கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது.

ஒரு சட்டம் நாட்டினதும், மக்களினதும் நன்மையை முன்னேற்றும் சட்டமாக அமையாவிடின், அது ஒரு சரியான சட்டமாக இருக்க




முடியாது. 1976ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி பிறப்பிக்கப்பட்ட சட்டம் ஒரு மறுப்புச் சட்டமாகும். இச் சட்டம் அரசின் விருப்பங்களை நிறைவேற்றவே பிறப்பிக்கப் பட்டதாகும். இச் சட்டம் தவறானது. எனவே, என்னை விசாரிக்க சட்ட ரீதியாகவோ, நியாய ரீதியாகவோ இந்த நீதிமன்றிற்கு அதிகாரம் இல்லை. இக்கட்டத்தில், ஆனி மாதம் 21ம் திகதி இவ்வழக்குத் தொடங்கியது முதல் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி நான் கூற விரும்புகின்றேன்.

(அனுமதி மறுக்கப்படுகிறது)

இந் நீதிமன்றின் நடவடிக்கையானது மனித சமுதாயம் தோன்றிய காலம்முதல் சாதித்த எல்லா நல்ல காரியங்களையும் அவமானப்ப டுத்துகிறது.

எனது வாக்குமூலத்தை முடிக்க முன், நான் 6ம், 7ம், திகதி கார்த்திகையில் நடந்த சம்பவங் களைத் தெளிவாகக் கூறியுள்ளேன். நான் ஏன் சாயிம், சியா, எம். எச். கான், தவாப், ஒஸ்மானி ஆகியோரை சாட்சிகளாக அழைத்தேன் என் பது நீதிமன்றத்துக்கு விளங்கும். அவர்கள் இங்கு வந்து நான் கூறியதில் ஏதாவது தவறு இருக்கிறதா என்று கூறட்டும்.

என்னுடன் சேர்த்து குற்றஞ் சாட்டப்பட்டி ருக்கும் இராணுவத்தினரைப் பற்றி இங்கு நான் சில சொற்கள் கூறியாக வேண்டும். எனக்கு அவர்கள் பற்றிய கடமையுண்டு. அவர்கள் மீது ஏதாவது குற்றம் சுமத்தப்பட் டிருந்தால், அவர்கள் இராணுவச் சட்டப்படி விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். நான் பங்களாதேஷ் உருவாகிய காலத்திலி ருந்தே உயர் இராணுவ அதிகாரிகளில் ஒருவனாக இருந்திருக்கிறேன். இன்று, ஆளும் இராணுவக் குழு தனது வஞ்சக நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக



எமது இராணுவத்தின் முக்கிய பகுதியைப் பலியாக்கி, ஆயுதப்படைகளைப் பலவீனப் படுத்தத் தயாராக இருப்பதைப் பார்த்து நான் மிகவும் மனவருத்தமடைகிறேன். நான் இந்த இளைஞர்களைப் பற்றியும், அவர் களின் வீரத்தைப் பற்றியும் பெருமைப்பட வேண்டும்.

ஏழரைக்கோடி மக்களைக் கொண்ட இந்த நாடு ஒருபொழுதும் அழிந்து போகாது. பங்களாதேஷ் மக்கள் தீரர்கள். கார்த்திகை 7இல் அவர்கள் படித்த படிப்பினைகள் அவர் களை வருங்கால நடவடிக்கைகளில் சரி யான வழியில் நடாத்திச் செல்லும். அந்தப் புரட்சி அவர்களுக்கு மாபெரும் துணிவைக் கொடுத்துள்ளது. நான் செய்த எல்லாவற்றிற் காகவும் நான் பெருமைப்படுகின்றேன். நான் பயப்படவில்லை.



**இறுதியாக.. தலைவரே..!!**

நான் எனது நாட்டையும் மக்களையும் நேசி த்தேன் என்று மட்டும் கூறுவேன். நான் இந்த நாட்டின் ஆன்மாவின் ஒரு பகுதி.

ஒருவரும் எம்மைப் பிரிக்க முடியாது!!

வாழ்க்கையில் துணிந்த மனதைத் தவிர வேறு சிறந்த சொத்தில்லை. அது எனக்கு உண்டு.

நான் எனது நாட்டையும் அப்படிப்பட்ட மனதை அடையுமாறு அழைக்கிறேன். துணிந்தெழுமாறு அறைகூவல் விடுக்கி றேன்.

**புரட்சி ஓங்குக!!**
**எமது நாடு வாழ்க!!**

அபுதாகிர் 1976ம் ஆண்டு ஆடி மாதம் 21ம் திகதி அதிகாலை 4 மணிக்கு டாக்கா மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

**தூக்கிலிடப்பட முன்னர்**
**அவர் கூறிய இறுதி வசனங்கள்**

'சென்று வருகிறேன் எனது நாட்டு மக்களே! பங்களாதேஷ் வாழ்க!! புரட்சி ஓங்குக!!'

அபுதாகிப் தனது குடும்பத்தினருக்கு எழுதிய இறுதிக் கடிதத்தில் இவ்வாறு தன் குழந்தைக ளுக்குக் கூறுகின்றார்

**நீட்டு!, ஜிசு!, மீசு,.**

உங்கள் எல்லோரது ஞாபகமும் என் மனதில் வருகிறது.

நான் உங்களுக்கு ஒரு சொத்தோ, பொருளோ விட்டுச் செல்லவில்லை. ஆனால், எமது நாடு முழுவதும் உங்களுக்கு வருங்காலத்தில் உண்டு. நாம் அன்பும் ஆத ரவுமற்ற, வெற்றுடம்புடன் கூடிய ஆயிரக்க ணக்கான குழந்தைகளைப் பார்த்துள்ளோம். அவர்களுக்கெல்லாம் இருப்பிடம் வழங்க விரும்பினோம்.

இந்த விடிவு வங்காளி மக்களுக்கு வெகு தொலைவா? இல்லை அது தொலைவி லில்லை. சூரியன் உதயமாகப் போகிறது.

நான் எனது இரத்தத்தை எனது நாட்டுக்குக் கொடுத்தேன். இப்பொழுது எனது உயிரையும் கொடுக்கப் போகிறேன். இது எமது மக்களின் ஆன்மாவில் புத்துணர்வையும் புதிய சக்தி யையும் கொடுக்கட்டும். இதைத் தவிர எனக்கு வேறு பரிசு எதுவுமில்லை. என்னை எவரும் கொல்ல முடியாது. நான் என் மக்கள் மத்தி யில் வாழ்கிறேன். எனது நாடி அவர்களது நாடியுடன் துடிக்கிறது.

என்னைக் கொல்ல வேண்டுமாயின் அவர் கள் எல்லா மக்களையும் கொல்ல வேண்டும்.

எந்தச் சக்தியால் இதைச் சாதிக்க முடியும்? ஒன்றுமேயில்லை!!

**முற்றும்**

# பிடித்த கதை!



## ஒரு குட்டிக்கதை

இந்த கதையை ஒரு முறையாவது எதாவது ஒரு வகையில் கேட்டிருப்போம்.

ஆனால் இப்படி கேட்டிருக்க வாய்ப்பு இல்லை

ஆம்,

இது நாம் அனைவரும் அறிந்த பாட்டி வடை சுட்ட கதை.

சீனர்கள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கும் முறையில் இருந்து நிறைய நாம் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

கதைக்கு வருவோம்.....

ஒரு ஊரில் ஒரு காகம் இருந்தது.

ஒரு நாள் அதற்கு மிகவும் பசிக்கவே,வடை சுடும் பாட்டியை தேடி சென்றது.

பாட்டி எனக்கு ஒரு வடை கொடு என்று காகம்பாட்டியிடம் மிகவும் பணிவாகக் கேட்டது.

[இங்கே குழந்தைகளுக்கு நேர்மை கற்றுக்கொடுக்கப்படுகிறது]

காகம் தனக்குத் தேவையான வடையைத் திருடவில்லை. மாறாக,

பாட்டியிடம் நேர்மையாக தனக்கு தேவையான வடையைக் கேட்டது.

பாட்டி, தன்னுடைய விறகுகள் ஈரமாக இருப்பதால்வடை சுடுவது கடினம் என்று காகத்திடம் கூறவே, காகம் யோசித்தது.

பாட்டி வடை சுடுவதற்காக பறந்து சென்று காய்ந்த சுள்ளிகளை பொறுக்கி வந்தது.

[இங்கே சீனர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கடின உழைப்பை கற்றுக்கொடுகிறார்கள்]

காகம் தனக்குத் தேவைப்பட்ட வடைக்காக கடினமாக உழைத்தது.

விறகு கிடைக்கவே பாட்டி வடையை சுட்டாள்.

வடையை சுட்டு முடித்த மகிழ்ச்சியில் காகத்தை மறந்தாள்.

[இங்கே சீனா நாட்டவர் தங்கள் குழந்தைகளுக்கு முதலாளித்துவத்தை கற்று கொடுக்கிறார்கள்]

இப்பொழுது காகம் தன் வடையை பாட்டியிடம் கேட்டது.

முதல் முறைபோல இல்லாமல் இப்பொழுது தன் வடையை உரிமையுடன் கேட்டது.

[இந்த இடத்தில் உரிமைக்காக போராடும் குணம் பற்றி குழந்தைகளுக்கு கற்பிக்கிறார்கள்]



காகம் முன்பு கேட்டது தானம், இப்போதோ அது கேட்பது தன் உழைப்பிற்கான பலன்.

காகத்திடம் மன்னிப்பு கேட்ட பாட்டி, காகத்திற்கு வடையைக் கொடுத்தாள். காகம்சந்தோஷமாக காட்டிற்குப் பறந்தது.

காட்டில், அனைவரையும் ஏமாற்றும்நரி காகத்திடம் வடையைப் பார்த்தது.

[இங்கே அவர்கள் உழைப்பை ஏமாற்றி சுரண்டுபவர்களைப் பற்றிக் கூறுகிறார்கள்]

நரி காகத்திடம் அதன் திறமைகளை புகழ்ந்தது.புகழில் ஒரு நிமிடம் மயங்கிய காகம் வடையைநரியிடம் பறி கொடுத்தது.

நரி தன்னை ஏமாற்றியதை உணர்ந்தகாகம் விழிப்புணர்வு பெற்றது.

[இந்த இடத்தில் விழிப்புணர்வின் முக்கியதுவத்தை அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்]

'நீ ஏமாற்றப்பட்டால் விழிப்புணர்வு அடைய வேண்டும்,

இல்லையேல் மீண்டும் அதே போல் ஏமாறுவாய்' என்பது இதன் சாரம்.

விழிப்புணர்வு அடைந்த காகம் மிகவும் பலமாகக் கரைந்தது. அதன் குரலைக் கேட்ட ஆயிரக்கணக்கானகாகங்கள் அந்த இடத்தில் திரண்டன.

[இந்த இடத்தில் குழந்தைகள் தொழிலாளர் ஒற்றுமையை கற்றுக் கொள்கிறார்கள்]

அன்று அந்த காகத்திற்கு வடை மட்டும் கிடைக்கவில்லை.

உழைப்பைச் சுரண்ட நினைத்த நரி பல ஆயிரக்கணக்கான காகங்களுக்கு உணவானது.

இந்த கதை நமக்கு மிகவும் பரிச்சயமானதுதான். ஆனால் இந்த கதையில் குழந்தைகளுக்கு இவ்வளவு கற்றுக்கொடுக்க முடியும் என்பதை நினைத்து வியப்பாக உள்ளது.

நாம் எப்படி கற்றுக்கொடுத்தோம்?பாட்டியை காகம் 'ஏமாற்றியது', காக்காவை நரி 'ஏமாற்றியது', இது தான் நாம் சொல்லிக் கொடுத்தது.

அவர்கள் வாழ்வின் நெறிமுறைகளைகற்பிக்கிறார்கள்.

நல்லதை யார் சொன்னால் என்ன? ஏற்போம்.., கற்றுக்கொடுப்போம்.

கொற்றவை



# வனில்

## அங்கம்; 04

டானியல் அண்ணர் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார்.

‘‘அண்ணை...! அண்ணை...! பிரச்சனை எங்கையிருக்கெண்டு பாக்கோணும். வாங்கோ அண்ணை.. அவவின்ரை ஃபோனைப் பாப்பம்.’’

சிலையாக நின்று கொண்டிருந்த டானியலை உலுப்பினான் ஆனந்தன்.

‘‘ரெஜினா எப்பிடித் தாங்குவாள்? அவளுக்கு என்னண்டு சொல்லுறது ஐயோ.. என்ன செய்யிறது?’’ புலம்பினார் டானியல்.

‘‘இப்ப ஒண்டும் சொல்ல வேண்டாம் ஏதாவது சொல்லிச் சமாளியுங்கோ. பிரச்சனை எவ்வளவு பெரிசு எண்டு பார்த்த பிறகு சொல்லலாம்...’’

கலாவின் அறைக்கு அவர்கள் போவதைப் பார்த்து ‘‘ஏன் அங்க...?’’ என்றார் ரெஜினா.

‘‘ இல்லை... பள்ளிக்குடத்தில செய்த கேள்விப் பேப்பரைத் தரச்சொன்னவையாம். கலாவுக்கு சுகம் வருமட்டும் நிக்கட்டும். நான் தேடிப்பாத்து வெண்ணிலாட்டைக் குடுத்து விடப்போறன்...’’

சாத்தியிருந்த அறைக்கதவைத் திறந்தவுடனே முகத்தில் அறைந்தது ஏதோவொரு வாடை. அறை அலங்கோலமாக இருந்தது. படுக்கையின் ஓரத்தில் சுருண்டு கிடந்த போர்வையும், கழற்றி வீசப்பட்ட உடைகளும், மேசையில் பரப்பப்பட்ட புத்தகங்களுக்கிடையில் கழுவப்படாத சாப்பாட்டுத் தட்டு, தேநீர்க் கோப்பைகளுமாக.... கட்டிலில் ‘லாப்ரொப்’ திறந்தபடி கிடந்தது. ஃபோன் எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. அறையின் இலட்சணத்தைப் பார்த்தவுடனே முகம் சுழித்தார் டானியல் அண்ணர்.

ஏனோ வெண்ணிலாவின் படிக்கும் இடம் ஞாபகத்திற்கு வந்தது ஆனந்தனுக்கு. பூட்டுத் திறப்பு என்றோ தனியிடம் என்றோ எதுவுமில்லை. சாந்தி எல்லா இடத்தையும் சுத்தமாக வைத்திருப்பாள். தப்பித்தவறி வெண்ணிலா எதையும் குலைச்சு வைச்சாக் காணும்.... அப்பிடியொரு கோவம் வரும் சாந்திக்கு. அதிலும், எதையும் மறைக்க வெளிக்கிடுறாள் பிள்ளை என்று கண்டால், இரண்டில ஒன்று பார்த்துத்தான் விடுவாள் சாந்தி.

‘‘கொம்பியூட்டரை திறந்து பாரும் தம்பி..’’ அறையை ஒதுக்க முயன்றவாறு சொன்னார் டானியல்.

லப்ரொப் ‘பாஸ்வேட்’ எதுவும் போடப்படாமல் இருந்தது. டானியல் அண்ணர் வீட்டில் மகளின் தனிப்பட்ட சுதந்திரத்தில் எவரும் தலையிடுவதில்லை. அந்தத் துணிச்சலாகக்கூட இருக்கலாம். லப்ரொப்பைத் துளாவ முன்னர்,

‘‘இந்தா...! இஞ்சை கிடக்கு ஃபோன்...’’ டானியல் அண்ணர் கட்டிலின் கீழ் விழுந்து கிடந்த ஃபோனைக் கண்டுபிடித்துவிட்டார்.

‘‘அவவின்ர பிறந்தநாள்தான் பாஸ்வேட்.... எனக்குத் தெரியும்.... அவ மாத்தியிருக்க மாட்டா....’’

அதிலிருந்து என்ன பூதம் கிளம்பப் போகிறது என்ற அச்சமோ, சிந்தனையோ எதுவுமில்லாமல் சாதாரணமாகச் சொன்ன டானியல் அண்ணர், ஏதாவது வில்லங்கமாக இருந்தால் என்ன செய்யப் போகிறார் என்ற அச்சத்தில் இருந்தான் ஆனந்தன். வில்லங்கமாக ஏதோ இருக்கிறது என்று அவனது உள்ளுணர்வு அடித்துச் சொன்னது.

எடுத்தவுடன் புகைப்படங்களைத் திறந்து பார்த்தான் ஆனந்தன். விதம் விதமான உடுப்புகளில் எடுத்த செல்ஃபிகள் நிறைய

இருந்தன. பூக்கள், மரங்கள் என்று கண்ட எல்லாவற்றையும் படம் பிடித்து வைத்திருந்ததில் கலாவினுள் இருந்த குழந்தைத்தனம் தெரிந்தது. ஐமிச்சப்படும்படி எதுவும் தெரியவில்லை. குறுஞ்செய்திகள் எல்லாவற்றையும் வாசித்தும், இளம் பிள்ளைகள் தமக்கிடையில் பரிமாறும் அர்த்தமில்லாத விடயங்களைத் தவிர வேறெதுவும் அகப்படவில்லை. யோசனையுடன் 'வட்ஸ்அப்' பைத் திறந்தான் ஆனந்தன்.

'எஸ்' என்ற எழுத்துடன் சேமிக்கப்பட்டிருந்த ஒரு இலக்கத்திலிருந்து மட்டும் எண்ணுக்கணக்கில்லாமல் அழைப்பு வந்திருந்தது. இங்கிருந்து அண்மைக்காலத்தில்தான் அந்த இலக்கத்திற்கு அழைப்புகள் போக ஆரம்பித்திருப்பது தெரிந்தது. அதைத் தவிர அந்த இலக்கத்தைப்பற்றி வேறெந்தத் தகவலும் இல்லை. குறுஞ் செய்திகளில் கிட்டத்தட்ட முக்கால்பங்கு 'எஸ்' இடமிருந்துதான் வந்திருந்தன.


திறந்து பார்த்த ஆனந்தனுக்கு மயக்கமே வந்துவிட்டது. இதை விடவும் கேவலமாக யாரும் ஒரு பெண்ணிடம் பேச முடியாது. ஒரு கணவனே தன் மனைவியிடம் பேசத் தயங்கும் விடயங்களை எந்தக் கூச்சமும் இல்லாமல் இந்தக் குழந்தைக்கு அனுப்பியிருந்தான் அந்த ராஸ்கல். அவளுடைய அங்கங்களை அருவருக்கத்தக்க வகையில் வர்ணித்து, தனது பாலியல் வக்கிரத்தைத் தீர்த்திருந்தான். ஒரு தகப்பனாகவும், சமுக அக்கறையில் போராடத்துணிந்த ஒரு மனிதனாகவும் ஆனந்தனால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

'உடைகளைக் களைந்து முன்னால் வந்து நில்' என்ற செய்தியை வாசித்ததும் இடிந்து போனான் ஆனந்தன்.

'அப்ப..! விசயம் எல்லை மீறிப் போய்விட்டதா...? யார் இவன்...? லவ்வரா..? இவன்தான் போதையையும் பழக்கினானா...? ஐயோ...! பதினைந்து வயசுக் குழந்தைக்கு என்ன தெரியும்...? ஆரோ பிரச்சனை குடுக்கிறாங்கள் என்றவுடனை ஏன் இந்தப்பிள்ளை தாய் தேப்பனிட்டைச் சொல்லேல்லை? டானியல் அண்ணைக்கு என்ன சொல்ல...?'

எண்ணங்கள் புயலாகச் சுழன்றடிக்க, தொடர்ந்தும் வாசித்தான் ஆனந்தன்.

அவன் ஒரு புகைப்படம் அனுப்பியிருந்தான். கிட்டத்தட்ட நிர்வாணக் கோலத்திலிருந்த கலாவை நடுத்தர வயதான ஒருவன் வெறித்துப் பார்ப்பது போல.தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் 'ஐயோ..!!'



என்று அலறி விட்டான் ஆனந்தன். ஓடி வந்த டானியல் அண்ணர் என்னவென்று பார்த்ததும் மயக்கமாகி விட்டார். றெஜினாவும் சத்தம் கேட்டு ஓடி வந்துவிட்டார். இனி மறைக்க எதுவுமில்லை. கொஞ்ச நேரம் ஒரே அல்லோலகல்லோலம். என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. 'சாகப் போகிறோம்!' என்று வெளிக்கிட்ட டானியல் அண்ணரையும் றெஜினாக்காவையும் தடுத்து நிறுத்தி, கொஞ்சம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கிடையில் படாதபாடு பட்டு விட்டான் ஆனந்தன். இவை எதுவுமே தெரியாமல் ஆனந்தமாக போதையில் உறங்கிக் கொண்டிருந்தாள் கலா.

லப்ரொப்பையும் ஃபோனையும் தோண்டத் தோண்ட அருவருக்கத்தக்க விடயங்கள் வெளிப்பட்டன. லப்ரொப்பில் பிறிதொரு இடத்தில்



சேமித்து வைக்கப்பட்டிருந்த புகைப்படங்களில் ஒன்றில் அந்த மனிதனின் முகம் தெளிவாகத் தெரிந்தது. அவன் கலாவின் ஆசிரியர் என்று உறுதியாக அடையாளம் காட்டினா றெஜினாக்கா. சட்டென்று,முன்பு வெண்ணிலா படிக்க வந்தபோது ஏதோ உறுத்துகிறதே என்று எண்ணியது ஞாபகத்திற்கு வந்தது ஆனந்தனுக்கு.

பெருந்தொற்றுக் காலத்தில் ஒன்லைன் படிப்பின்போது பிள்ளைகள் சிலரை அடையாளப்படுத்தி தன்னுடைய வக்கிரப் பேச்சை ஆரம்பித்திருக்கிறான் இந்த ஆசிரியன். அவர்கள் குடும்பச் சூழல், அவர்களுக்கிருந்த சுதந்திரம், அவர்களின் பலவீனம், கேட்க யாருமில்லாதவர்கள் என்று பார்த்துத் தெரிவு செய்திருக்கிறான். அவர்களுக்குப் பிடித்த ஆசிரியனாகப் பழகி, மெல்ல மெல்ல தனது வக்கிர உலகினுள் அவர்களை இழுத்து வந்திருக்கிறான். இரவு பகலாக தகவல் அனுப்பி அவர்களுடன் தொடர்பில் இருந்திருக்கிறான்.

பின்னர் படிப்படியாக, அவர்களை அரைகுறை ஆடைகளுடன் தனியறையில் நின்று தனக்கு மட்டும் காட்டுமாறு இணங்க வைத்து, அவர்களுக்கே தெரியாமல் அவற்றை புகைப்படம் எடுத்து வைத்து மிரட்ட உபயோகப்படுத்தியிருக்கிறான். தொல்லைகள் எல்லை மீறியபோது, 'நெற்' இல் போட்டுவிடுவான் என்ற பயத்தில் பிள்ளைகள் யாருக்கும் சொல்லவில்லை. போதைக் குளிசைகளுக்கும் இவனுக்கும் தொடர்பு இருப்பது உறுதியாகத் தெரிகிறது.

'இனிப்பைத் தாங்கோ!! என்ன சொன்னாலும் செய்யிறன்' என்று இங்கிருந்து செய்தி போயிருந்ததைப் பார்த்து உயிரே போவது போலிருந்தது.

''எல்லாத்தையும் அப்பிடியே போட்டிட்டு எங்கையாவது கண்காணாத இடத்துக்கு இவளைக் கூட்டிக்கொண்டு போவம் அப்பா.... ராவோட ராவா ஓடடுவம்... இனி இங்கை வேண்டாம். எல்லாங் காணும்...'' றெஜினா குமுறிக் குமுறி அழுதா. டானியல் அண்ணர் கல்லைப் போல உட்கார்ந்திருந்தார்.

றெஜினாக்கா சொல்வது போல அது அவ்வளவு இலகுவானதாக இருக்கும் என்று ஆனந்தனுக்குப் படவில்லை. பாடசாலை மாணவிகள் பலர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். தனி ஒருவன் மட்டும் இத்தனை பெரிய அயோக்கியத்தனத்தைச் செய்திருக்க முடியாது.

'அப்ப வேற யாரெல்லாம் இதில சம்பந்தப்பட்டிருப்பினம்...? எத்தினை வீடுகளுக்கு இந்தக் கதை ஏற்கனவே தெரிஞ்சிருக்கும்...? வேற யாராவது தெரிஞ்சும் தங்கடை பிள்ளைக்காக பொத்தி வைச்சிருக்கினமோ....? இதில போதைவஸ்து என்னண்டு வந்தது...? பெரிய நெற்வேக்காக இருக்குமோ...?'

பல்லாயிரம் கேள்விகள் ஆனந்தனின் மனதில் ஓடின. இவற்றிற்கு விடை தெரியாமல் இந்தப் பிரச்சனைக்கு எந்த முடிவும் கிடைக்கப் போவதில்லை. இடையில், டானியல் அண்ணர் ஆட்களை இப்படியே விட்டுவிட்டுப் போனால் ஏதாவது செய்து விடுவார்களோ என்ற பயம் வேறு. இங்கு வந்தும் கன நேரமாகிவிட்டது. தனக்கு என்ன நடந்ததோ என்று சாந்தி பயந்து போய்விடுவாள். தனது குடும்பத்துடன்

ஒன்றாக, பாதுகாப்பாக இருக்கவேண்டும் போலிருந்தது ஆனந்த னுக்கு. அவனும் சாதாரண மனிதன்தானே, அதிலும் கலா வயதில் இருக்கும் பெண்பிள்ளையின் தகப்பன் வேறு.

'கடையில் ஒரு சின்னப் பிரச்சனை. டானியல் அண்ணையோ டதான் நிக்கிறன். வரச் சுணங்கும். பயப்பட வேண்டாம்.' என்று சாந்திக்கு ஃபோனில் தகவல் சொல்லிவிட்டான்.

'' அண்ணை...' தயங்கியபடி விளித்தான் ஆனந்தன்.

'' நான் ஒண்டு சொல்லுறன் கேக்கிறியளோ...? இப்ப ஆருக்கும், எதுவும் தெரிய வேண்டாம். கனக்கப் பேர் இதில சம்பந்தப்பட்டிருக் கினம். எங்கடை பிள்ளையும் இருக்கு... அவசரப்பட்டுக் கதைக் கப்போக ஆராவது ஏதும் செய்துகிய்து போட்டினமெண்டால்...? முதல்லை சம்பந்தப்பட்ட ஆக்கள், ஆதாரங்கள் எண்டு அத்தினை யையும் திரட்டுவம் ஆதாரமில்லாமல் எதுவுஞ் செய்யேலா....''

''அய்யோ..!! ஒண்டுஞ் செய்யாமல் இப்பிடியே என்னண்டிருக்கி றது...? நான் செத்துப் போவன்.... நான் நெஞ்சு வெடிச்சுச் செத்துப் போவன்....'' ரெஜினாக்கா ஓவென்று அழுதா.

''அக்கா...! உங்களை மாதிரித்தான் மற்ற வீடுகளிலயும்.... அங்க ஆரும் அவசரப்பட்டு ஏதும் செய்தா. அந்தப் பழியும் விழுந்திடும்....''

''உவள் போதைக்குளிசையும் பழகியிருக்கிறாள். இப்ப அதைப் போட்டிட்டுத்தான் உந்த ஆட்டம் ஆடியிருக்கிறா.... நீ வீட்டில தானே இருந்தனீ....? ஒரு பெம்பிளைப் பிள்ளையின்ர நடமாட்டம் வித்தியா சமா இருக்கெண்டால்.... ஒரு தாய் நீ.... கவனிக்க மாட்டியோ....?''

ஆத்திரத்துடன் ஆனந்தனை இடைமறித்தார் டானியல் அண்ணர்.

போதைவஸ்து என்றவுடன் பேயறைந்தது போல் ஆகிவிட்டா ரெஜி னாக்கா. கண்ணீர் தாரை தாரையாக ஓடியது. வாய் வார்த்தைகளே வரவில்லை. திகைப்புடன் அப்படியே சரிந்து உட்கார்ந்துவிட்டா. டானியல் அண்ணரும் ரெஜினாக்காவும் பரஸ்பரம் நல்ல புரிந்துணர் வுடன் குடும்பம் நடத்துபவர்கள். அவர்களுக்கிடையில் சண்டை



வருவதே அரிது. இன்று, நிலைமையின் கையாலாகாத்தனத்தினால் அவர் ரெஜினாக்கா மீது பாய்ந்து விட்டார் என்பது புரிந்தது.

லப்ரொப்பிலும் ஃபோனிலும் ஆனந்தன் தகவல் திரட்டும்போது, அறையை அங்குலம் அங்குலமாகத் துளாவினார் டானியல் அண் ணர். ஏதோ மடித்து வைக்கப்பட்டிருந்தது போன்று தோன்றிய இரண்டு கடதாசிகளைத் தவிர வேறெதுவும் கிடைக்கவில்லை. ஃபோனுக்கும் லப்ரொப்பிற்கும் புதிய பாஸ்வேட் போட்டு தன்னுடைய அறையில் பத்திரப்படுத்தினார் டானியல் அண்ணர்.ரெஜினாக்காவிடம் அசை



வேயில்லை. அப்படியே உறைந்து போய் இருந்தா. இருளத் தொடங் கிவிட்டது.

''பாவம், இவர்களும் இன்று முழுக்க வாயில பச்சைத் தண்ணிகூட டப் படேல்லை. இன்னுமின்னும் எத்தனை இடி விழப்போகுதோ?''

தானே போய் தேநீர்தயாரித்து வந்த ஆனந்தன் வற்புறுத்தி அவற்றை அவர்களிடம் கொடுத்தான்.

''இந்தா...! இப்ப வந்திடுவன்''

நல்ல வேளையாக கிட்டத்தில் சாப்பாட்டுக் கடை இருந்தது. மூன்று இடியப்பப் பார்சலும் வாங்கிக்கொண்டு வேகவேகமாக வந்தான் ஆனந் தன். கொடுத்த நேநீர் அப்படியே ஆறிப்போய்க் கிடந்தது. அவர்கள் அதைத் தொட்டும் பார்க்கவில்லை. மீண்டும் சூடுபண்ணி அவர்க ளைக் குடிக்க வைப்பதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது ஆனந்தனுக்கு.

''அண்ணை...!! பிரச்சனை எங்கடை வீட்டுக்குள்ளை வந்திட் டுது. நாங்கள்தான் தீர்வு காணவேணும்.... நீங்கள் இப்பிடி இடிஞ்சு போனா, அக்கா ஆரிட்டைப் போவா.... பிள்ளை சின்னப்பிள்ளை... நீங்கள்தானே உறுதுணையா இருக்கோணும். மனதை இறுக் கிப் பிடியுங்கோ.... உங்களோட நான் இருக்கிறன்.... ஆற்றை தொடர்பும் ஏற்படாமலும், எந்த விசயமும் வெளில போகாமலும் பாத்துக் கொள்ளுங்கோ....''

''அண்ணை! கலாக்கு ஏலாம வந்தால் உடனை வேணியைக் கூப் பிடுங்கோ... அவ எந்த நேரமும் வருவா... தயங்க வேண்டாம்.... கதை வெளில போகாது.... மற்றது, அண்ணை...! பத்திரம்....''

டானியலின் கையைப் பிடித்துக்கொண்டு சொன்ன ஆனந்தனிடம்

''விரக்தியில குடும்பத்தோட ஏதும் செய்திடுவம் எண்டு பயப்பிடா தையும்.... அப்பிடிச் செய்யமாட்டன்....'' என்றார் டானியல்.

''நாளைக்கு வாறன்... என்ன செய்யிறது எண்டு யோசிச்சு முடி வெடுப்பம்.''

நன்கு இருட்டி விட்டது. வரும்போது ஆட்டோவில் வந்ததால் இனி இரண்டு மூன்று கிலோமீற்றர் நடந்துதான் வீட்டுக்குப் போக வேண்டும். இதமான வெளிக்காற்றும் ஆற்ற முடியாதபடி மனம் புண்ணாகி வலித்தது. தெரிந்தவரின் மகள் இப்படியொரு பிரச்ச னையில் மாட்டியிருப்பதையும் கடந்து.... வீரமும் தீரமும் விளைந்த மண்ணில் சிறுமைகளும், போதைப்பொருட்களும், சீரழிவுகளும் அரங்கேறும் துன்பத்தை உயிரோடிருந்து பார்க்க வேண்டியுள்ளதே என்ற வேதனையைத் தாங்க முடியவில்லை. இந்த மண்ணுக்காக வும், மக்களுக்காகவும் தங்களைக் கொடுத்த மாவீரர்களை எண்ணிப் பார்த்தான் ஆனந்தன்.

மனமும் உடலும் சோர்ந்து களைத்துப் போயிருந்தன. தூரத்திலி ருந்தே சாந்தி வெளியில் நிற்பது தெரிந்தது.

**தொடரும்..**



# தமிழ் மருத்துவக் குறிப்புகள்

( அருந்தமிழ் மருத்துவம்
500 என்ற பாடலில் இருந்து )

சித்த மருத்துவர் பாக்கம் தமிழன்
தமிழ் மருத்துவ அறிவுரைப்பா

மூளைக்கு வல்லாரை
முடிவளர நீலிநெல்லி
ஈளைக்கு முசுமுசுக்கை
எலும்பிற்கு இளம்பிரண்டை

பல்லுக்கு வேலாலன்
பசிக்குசீ ரகமிஞ்சி
கல்லீரலுக்கு கரிசாலை
காமாலைக்கு கீழாநெல்லி

கண்ணுக்கு நந்தியாவட்டை
காதுக்கு சுக்குமருள்
தொண்டைக்கு அக்கரகாரம்
தோலுக்கு அருகுவேம்பு

நரம்பிற்கு அமுக்குரான்
நாசிக்கு நொச்சிதும்பை
உரத்திற்கு முருங்கைப்பூ
ஊதலுக்கு நீர்முள்ளி

முகத்திற்கு சந்தனநெய்
மூட்டுக்கு முடக்கறுத்தான்
அகத்திற்கு மருதம்பட்டை
அம்மைக்கு வேம்புமஞ்சள்

உடலுக்கு எள்ளெண்ணை
உணர்ச்சிக்கு நிலப்பனை
குடலுக்கு ஆமணக்கு
கொழுப்பெதிர்க்க வெண்பூண்டே



கருப்பைக்கு அசோகுபட்டை
களைப்பிற்கு சீந்திலுப்பு
குருதிக்கு அத்திப்பழம்
குரலுக்கு தேன்மிளகே!

விந்திற்கு ஓரிதழ்தாமரை
வெள்ளைக்கு கற்றாழை
சிந்தைக்கு தாமரைப்பூ
சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை

கக்குவானுக்கு வசம்புத்தூள்
காய்ச்சலுக்கு நிலவேம்பு
விக்கலுக்கு மயிலிறகு
வாய்ப்புண்ணிற்குமணத்தக்காளி

நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர்
நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்
வேர்க்குருவிற்கு பனைநுங்குநீ
வெட்டைக்கு சிறுசெருப்படையே

தீப்புண்ணா குங்கிலியவெண்ணை
சீழ்காதுக்கு நிலவேம்பு
நாப்புண்ணிற்கு திரிபலாவேலன்
நஞ்செதிர்க்க அவரிஎட்டி

குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான்
குருதிகக்கலுக்கு இம்பூரல்வேர்
பெரும்பாட்டிற்கு அத்திநாவல்
பெருவயிறுக்கு மூக்கிரட்டை

கக்கலுக்கு எலுமிச்சைஏலம்
கழிச்சலுக்கு தயிர்சுண்டை
அக்கிக்கு வெண்பூசனை
ஆண்மைக்கு பூனைக்காலி

வெண்படைக்கு பூவரசு கார்போகி
விதைநோயா கழற்சிவிதை
புண்படைக்கு புங்கன்சீமையகத்தி
புழுகுடற்கு வாய்விளங்காமணக்கு

கால்வெடிப்பா மருதாணிகிளிஞ்சல்
கரும்படை வெட்பாலைசிரட்டை
கால்சொறிக்குவெங்காரபனிநீர்
கானாகடிக்கு குப்பைமேனிஉப்பே

உடல்பெருக்க உளுந்துஎள்ளு
உளம்மயக்க கஞ்சாகள்ளு
உடல்இளைக்க தேன்கொள்ளு
உடல் மறக்க இலங்கநெய்யே

அருந்தமிழர் வாழ்வியலில்
அன்றாடம்சிறுபிணிக்கு
அருமருந்தாய் வழங்கியதை
அறிந்தவரை உரைத்தேனே!!

# அன்புள்ள!!

அன்புள்ள (.......)

பல வருடங்களின் பின்பு இக்கடிதத்தினை தங்களிற்குவரைகிறேன்.களங்களில் நிற்பதால் தாமதமாகவே தங்கள் பதில் கடிதம் எனக்கு வந்து சேருவதுண்டு.

ஆனால், தற்போது தங்கள் பதில் கடிதத்திற்காக பதின்மூன்று ஆண்டுகளாக காத்திருக்கிறேன். காலமும் தூரமும் நமக்குள் அதிகமாகிவிட்டதல்லவா..?

நீங்கள் என்னை மறந்து வாழக்கூடியவர் இல்லை.ஆனால், ஏன் இவ்வளவு காலம் தாமதிக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

ஓடும் அருவிகளும் உங்கள் பெயரை இசைத்தபடிதானே செல்கிறது.பறக்கும் பறவைகளும் காடுகளில் அன்றொருநாள் உங்களை கண்டதாய் கூறி மகிழ்கின்றனவே.

அப்படியாயின் தனித்தொரு போர்வீரனாக மட்டும் நீங்கள் வாழவில்லை.அன்பிற்கு இலக்கணமாக அல்லவா வாழ்ந்திருக்கிறீர்கள்.

உங்களை நான் மறந்து வாழ்வதா..?இல்லை இல்லை உங்களை மறந்து புதிதாய் ஒரு வாழ்வு வாழ்வதா..?அது சாத்தியமானதா..?

கார்த்திகை மாதம் வந்தாலே கருக்கொண்ட மேகத்தைப்போல் என் மனம் இருளாகிவிடுகிறது.போர் வீரனை நேசிப்பவளிற்கு தலையணைதான் தலைவனென்று என் தோழிகள் கூறுகிறார்கள்.

தங்கள் வரவை எதிர் பார்த்து காத்திருக்கும் என்னை நீங்கள் நிரந்தரமாக நீங்கிச் சென்றுவிடுவதா..?இது நியாயமா..? பல தடைகளைத்தாண்டி உங்களை நேசித்தவளை கலங்கவைத்து தாய் மண்ணை அதிகம் காதல் செய்துவிட்டீர்களே..!

நீங்கள் சுவாசித்த காற்றை நானும் சுவாசித்தபடிதான் வாழ்கிறேன்.இந்த காத்திருப்பு அழகானது.அதுவும் ஓர் போர் வீரனிற்கான காத்திருப்பானது பேரழகானது.நான் அழுவதை தாங்கள் விரும்பமாட்டீர்கள் என்பதையும் நானறிவேன்.

இந்த பிரபஞ்சம் ஒரு விசித்திரமானது.நாம் நேசிப்பது நமக்குக் கிடைப்பதில்லை.நேசிக்காதவை தாரளமாக இலகுவில் கிடைத்துவிடுகின்றன. இல்லையா..?

களம் நமக்கு சாதகமாக அமைந்தால் ஓடோடி வருகிறேன் கண்மணி என்றீர்களே.இந்த ஜென்மமல்ல ஏழேழு ஜென்மத்துக்கும் உங்களவளாய் உங்கள் வருகைக்காக காத்திருக்கிறேன்...

**நமதான நினைவுகளை என்றும் ஆரத்தழுவியபடி.....**

**பிரியமுடன்,**
**போர் வீரனின் காதலியாய்,**

**-பிரபாஅன்பு.**



வி.ரி.சகாதேவராஜா

## இராஜேந்திர சோழன் பொலனறுவையில் நிறுவிய

# ஏழு சிவனாலயங்கள்!



இலங்கையில் 77 ஆண்டுகள் சோழராட்சி நிலவியது. அதில் இராஜேந்திரசோழன் பொலனறுவையில் ஏழு சிவனாலயங்களை நிறுவினான். இன்றும் அதன் எச்சங்கள் பொலன்னறுவையில் காணப்படுகின்றன. அன்று இலங்கை முழுவதும் நிருவாக மொழியாக தமிழ் மொழியே இருந்தது.

நம்புவீர்களா? ஆனால், அதுதான் உண்மை.

வரலாற்றை நோக்குகின்ற போது, பத்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் இந்தியாவில் இருந்து படையெடுத்த இராஜராஜ சோழன் இலங்கையின் தலைநகராக இருந்திருந்த அனுராதபுரத்தை கைப்பற்றி ஆட்சி செலுத்தினான்.

பின்னர் போரில் அனுராதபுரம் வீழ்ச்சியுற, தெற்கே உள்ள பொலனறுவையை கைப்பற்றி தலைநகரமாக்கினான்.

1007 காலப் பகுதியில் இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழன் இலங்கையை கைப்பற்றி முழு இலங்கையையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான்.

அக் காலத்தில் ராஜேந்திர சோழன் அங்கு ஏழு சிவன் ஆலயங்களை உருவாக்கினான்.அது மாத்திரம் அல்ல, இலங்கையின் பல பாகங்களிலும் ஆலயங்களை அமைத்ததில் ராஜேந்திர சோழனுக்கு பெரும் பங்கு இருக்கின்றது.

1070 ஆண்டு வரை ராஜேந்திர சோழன் அதனை சிறப்பாக பராமரித்து வந்தான்.

இலங்கையில் 77 ஆண்டுகள் சோழர் ஆட்சி காலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் போது இலங்கையில் நிர்வாக







### இராஜேந்திரசோழன் பொலனறுவையில் நிறுவிய

# ஏழு சிவனாலயங்கள்!



மொழியாக தமிழ் மொழி இருந்ததும் இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.இன்றும் அந்த ஆலயங்களின் எச்சங்கள் பொலன்னறுவை நகரில் காணப்படுகின்றன.

கடந்த வாரம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவ சங்கர் ஜி தலைமையிலான குழுவினர் அங்கு சென்ற பொழுது அதனை காண முடிந்தது.

அதன் சில பாகங்களை இங்கு நீங்கள் காணலாம்.

சோழர்கள் ஆட்சிகாலத்தில் 'ஜனநாதமங்கலம் ' என பொலனறுவை அழைக்கப்பட்டது. அந்தளவிற்கு இலங்கையில் சைவ சமயம் மேலோங்கி இருந்தது.





# சுட்டெரிக்கும் சூரியனுக்கு ஒரு விழா!!

பகலவனுக்கு இன்று
பருவம் அறுபத்தெட்டு.
தனக்கென எதையும்
தரணியில்
கொள்ளாத பேரொளி!
பிறப்பிலே தலைவன்!!
தமிழினம் தலைநிமிர்ந்திட
தளராது உழைத்தவன்
கரிகாலன் பெயர் கொண்ட
காவியத் தலைவன்-நாமம்
ஆண்டாண்டு வாழ
வழிபாடு செய்கிறோம்!!

இழப்பதற்கு எதுவுமில்லா
உத்தமன்!
விடுதலை வெளிச்சத்தை
பரிசாய் வழங்கிட
மெழுகாய்த் தேய்ந்த
தன்னிகரில்லாப் போராளி!

புறமுதுகிடுவது இவன்
வரலாற்றில் இல்லை.
புகழுக்கு மயங்கும்
குணமும் இங்கில்லை..
நீதியும் நேர்மையும்
இவனின்
இருகண்கள் - இந்தக்
கண்களைப் பிடுங்கி
களங்கம் கற்பிக்க
முயன்று மூக்கறுபட்டவர்
ஏராளம்! ஏராளம்!

போரியல் வல்லுனர்
வியந்து பார்த்தனர்!
பாரினில் பராக்கிரமம்
மிகுந்தவன் என்றனர்!
காட்டினில் உறைந்தவன்
கதிகலங்க வைக்கிறான் என
வியந்து பார்த்தனர்
விசனமும் கொண்டனர்.
புலியென்றால்
கதிகலங்கும்.
படைநடத்தி பெருவீரம்
காட்டிய வல்வையின்
செல்வன்!

சுட்டெரிக்கும் சுக்கிரன்
எங்கள் தானைத் தளபதி!
ஒழுங்கும் கண்ணியமும்
ஒருங்கே நிலைத்திட
கட்டுப்பாட்டுடன்
கடமையைச்
செய்தவன்,
எங்கள் இதயமெங்கும்
நிறைந்திருக்கும்
தலைவா!!!
நின்புகழ், நின் கனவு
நிலைக்க
வழிபாடு
செய்கிறோம்.. வாழி!!

ஆண்டாள்










# கொழுந்துவிட்டெரிந்தன ஈகச்சுடர்கள்
# கண்ணீரால் நனைந்தது தமிழர் தாயகம்

